
# பனிமலர்

இதழ் 7 பெப்ருவரி 1993

Rajan.



இந்த இதழில் ஆரம்பமாகிறது

## தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு என்ன?

விவாதம்

£1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A.J MINI MARCKET

இந்திய - இலங்கை உணவுப் பொருட்களின் விற்பனையாளர்
தென்கிழக்கு இலண்டனில் முதலாவதாக நிறுவப்பட்ட
தமிழர் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவனம்.
மாமிச உணவு வகைகள், கடலுணவுப் பொருட்கள், *CD, VIDEO, AUDIO*
இலங்கை இந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள்
இவற்றுடன் இப்போது **OFF LICENCE** இணைக்கப்பட்டுள்ளது.

## A.J MINI MARCKET

30 LOAMPIT HILL LEWISHAM LONDON SE13 7SW

**TEL : 081 - 691 9981**

With Compliments

# RAJA & CO.

SOLICITORS
ADMINISTRATORS OF OATHS

338 Hoe Street
Walthamstow
London E17 9PX

Telephone
081-503 6311

Fax 081-503 7523

# K.R.S. ORIENTAL STORES

*இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைத்து உணவுப்பொருட்கள் *அனைத்து கடலுணவுப்பொருட்கள் *அனைத்து இறக்குமதி செய்யப்பட்ட மரக்கறிவகைகள் *அனைத்து பாடல்கள் நிறைந்த AUDIO, CD. *அனைத்து பத்திரிகைகள் சஞ்சிகைகள் *அனைத்து KITCHEN உபகரணங்கள் *மற்றும் அனைத்து தேவைகளுக்கும் நாடவேண்டிய இடம்.

## K.R.S. ORIENTAL STORES

தரமான உற்பத்திகளை சிறந்த விலையில் பல விதமான தெரிவில்
வாடிக்கையாளர்களின் திருப்திக்காக அளிப்பதே எமது சேவையின் நோக்கம்
சந்தர்ப்பத்தை நழுவவிடாது விஜயம் செய்யுங்கள்

## K.R.S. ORIENTAL STORES

**33 LEE HIGH ROAD, LEWISHAM SE13 5NS**
**TEL: 081 - 297 9432 FAX: 081 - 297 9453**

* NOTE: Public Car Park Facilities Available Next To Us.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊரிலும் உலகிலும்:

## இந்திய அரசின் கடற்கொள்ளை:

தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேசப் பொறுப்பாளர் கிட்டு உட்பட ஒன்பது போராளிகளைக் கொன்றும் பத்துப் பேரைக் கைது செய்தும் இந்திய அரசு நடத்திய கடற்கொள்ளை தமிழீழ மக்களை ஓர்கணம் உலுப்பிற்று.

புலிகளின் தரப்புச் செய்திகளின் படி, சர்வதேச நிறுவனங்கள், மற்றும் சில நாடுகளுடன் கலந்தாலோசித்ததன் பேரில் 1) இலங்கை அரசுடன் ஓர் யுத்த நிறுத்த உடன்பாடு காண்பதற்கும், 2) ஈழத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குமான அடிப்படைகள் பற்றி இயக்கத் தலைமையுடன் முடிவு செய்வதற்காக கிட்டு பயணம் செய்த கப்பலே இந்தியக் கடற்படையின் கடற்கொள்ளைக்கு இலக்கானது எனச் சொல்லப்படுகின்றது.

விமான எதிர்ப்பு ஏவுகணைகள், கடற் கண்ணிகள், தொலைத்தொடர்புக் கருவிகள், எரிபொருட்கள் போன்ற யுத்தத்திற்குத் தேவையான அத்தியாவசிய இராணுவக் கருவிகள் அக்கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டதாக வேறு சில செய்திகள் கூறுகின்றன. இந்திய அரசால் கைது செய்யப்பட்டுள்ள போராளிகளின் விசாரணையின்போது, இதுபற்றி மேலும் தகவல்கள் வெளிவரலாம் என, கொழும்புப் பத்திரிகைகள் ஊகம் தெரிவித்துள்ளன.

ஜனவரி மாதம் 13ம் தேதியே கப்பல் இடைமறிக்கப்பட்டது எனினும், ஜனவரி 7ம் தேதியே சிங்கப்பூரில் உள்ள ஒரு வெளிநாட்டு ஏஜென்சி மூலம் இந்திய அரசுக்கு தகவல் தெரிந்துவிட்டது என்றும் ஒரு செய்தி.

இச்சம்பவத்தின் போது பிரேமதாசா இந்தியாவிலேயே இருந்தார். தனது நாட்டுப் பிரஜைகள் என்ற முறையில் அவர் எந்தக் கோரிக்கையும் விட்டதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தின் தரப்பில், “நிலமையை அவதானிப்பதாகவும் உடனடியாகக் கருத்து எதுவும் சொல்ல முடியாது” எனவும் கூறப்பட்டது. இது இந்திய மேலாதிக்கத்துக்கு வழங்கப்பட்ட மௌனமான அங்கீகாரமே தவிர வேறொன்றுமில்லை.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான உள்நாட்டு யுத்தம் ஒரு இழுபறி நிலையை எட்டும்போதெல்லாம் இலங்கை அரசு, “அரசியல் தீர்வு காண்பது” பற்றிப் பேசும். பேச்சு வார்த்தைக்கு அழைப்பு விடும். ஒருபுறம் பேச்சுவார்த்தைக்கு அழைப்பது, மறுபுறம் ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளைத் தொடுப்பது என்ற இரட்டைத் தந்திரத்தைக் கையாண்டு வருகின்றது. விடுதலைப் புலிகளும் பேச்சுவார்த்தைக்குப் பேச்சுவார்த்தை ஆக்கிரமிப்பு இராணுவ நடவடிக்கைகளுக்கு தற்காப்பு இராணுவ நடவடிக்கைகள் என்ற முறையைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

இந்திய அரசு, இலங்கை அரசுக்கும் தமிழ் மக்களுக்குமிடையிலான முரண்பாட்டை பயன்படுத்தி இலங்கையின் மீது தனது மேலாதிக்கத்தை நிறுவ முயன்று வருகின்றது. இதனால் இந்திய அரசின் சம்பந்தமின்றி, வேறுநாடுகள் சம்பந்தப்பட்டோ அல்லது நேரடியாகவே விடுதலைப் புலிகளும் - இலங்கை அரசுமோ பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதை இந்திய அரசு எப்போதுமே எதிர்த்து வருகின்றது. இப்பேச்சுவார்த்தைகளுக்குத் தடையாக இருக்கும் பொருட்டே விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியாவில் தடை செய்துள்ளது.

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் யுத்தம் ஆரம்பித்த 90ம் ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து இந்தியா ஈழத்தமிழர்களின் விடுதலை யுத்தத்திற்கு எதிரான இரண்டாவது போர்முனையாக விளங்குகின்றது. தமிழகத்தை பின்புலமாகப் பாவிப்பதைத் தடுத்தும், இந்திய - சர்வதேச கடற் பரப்பை பயன்படுத்துவதைத் தடுத்தும், பாக்கு நீரிணையில் இலங்கைக் கடற்படையுடன் கூட்டுக் கண்காணிப்பு, இலங்கைப் படைத்தளபதிகளுக்கு இராணுவப் பயிற்சி என இப்போர்முனை செயற்படுகின்றது.

‘இந்து சமுத்திரப் பிராந்தியம் அணு ஆயுதங்கள் தாங்கிய அன்னியக் கப்பல்களின் நடமாட்டத்தில் இருந்து சுதந்திரமானது’ என்ற யுத்த தந்திர கருத்தாக்கத்தை நரசிம்மராவ் அரசாங்கம் கைவிட்டு விட்டது. அமெரிக்கக் கடற்படையுடன் இந்தியக் கடற்படை கூட்டுப்பயிற்சி செய்கின்றது. இந்திய, அமெரிக்க படைகளுக்கு இடையில் ஒத்துழைப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்காக இருபடைகளின் பிரதிநிதிகள் கொண்ட ஒரு கூட்டு ஆணைக்குழு உருவாக்கப்பட்டிருக்கின்றது. அமெரிக்க - இந்திய ராணுவ ஒப்பந்தம் ஒன்றை உருவாக்குவதற்காக கள்ளத்தனமாக ராவ் அரசாங்கம் முயற்சி செய்து வருகின்றது. விடுதலைப் புலிகளின் ஊடுருவல் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஆபத்தானது என ஊளையிடுகிற இந்திய அரசுக்கு, அமெரிக்கப் படைகளின் நடமாட்டம் சட்டபூர்வமானதாகத் தெரிந்தால் அது இந்திய சட்டத்தின் யோக்கியதையைக் காட்டவில்லையா?

பனிமலர் - 7
பெப்ருவரி 1993
வெளியீடு:
தமிழ்மக்கள்
புதிய கலாச்சாரக் குழு

தொடர்புகளுக்கு:
BM PANIMALAR
LONDON.
WC1N 3XX
UK.

எழுத்துப்பதிவு:
இ.குருநாதன்
எஸ்.செல்வி
அச்சுப் பதிவு:
Set Line Data Ltd.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சர்வதேசிய நிலைமையைப் பொறுத்தவரையில் கிட்டு எடுத்துச் சென்றதாகச் சொல்லப் படும் "சமாதானத் திட்டத்தை" தயாரிக்கத் துணைநின்ற நாடுகளோ, சர்வதேச நிறுவனங்களோ இந்திய அரசின் இச்செயலைக் கண்டிக்க முன்வரவில்லை.

மாறாக இந்திய அரசால் தடைசெய்யப்பட்ட இயக்கம் இந்திய எல்லைகளில் 'ஆயுதக் கடத்தலில்' ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது எனப் பேசப்படுகின்றது. இந்திய அரசு ஈழத்தமிழ் அகதிகளைப் பலவந்தமாக நாடுகடத்தியதை முன்னுதாரணமாகக் கொண்டு நோர்வே, சுவீடன், சுவிற்சலாந்து நாடுகளும் பலவந்த நாடுகடத்தலுக்குத் தயாராகின்றன. பிரித்தானிய அரசு கிட்டுவை நாடுகடத்தியது. விடுதலைப் போராளிகளை இந்திய அரசிடம் ஒப்படைக்கும் ஒப்பந்தத்தைச் செய்துள்ளது. இலங்கை அரசுக்கு ஆயுத ஏற்றுமதி செய்வதற்கிருந்த தடையை நீக்கி விட்டது. பொருளாதார "உதவி" வழங்குகின்றது. கிட்டு கொலை செய்யப்பட்ட விடயத்திலும் கூட சர்வதேச ஏஜென்சி ஒன்றின் மூலம் இந்திய அரசுக்கு தகவல் கிடைத்ததாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

வாலைச்சுருட்டி வீணீர் வடித்தபடி அலையும் விசர் நாயைப்போல, முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் தமது பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண கீழைத்தேசங்களின் மீது வெறிகொண்டு பாய்கின்றன. நரசிம்மராவ் அரசாங்கம் ஏகாதிபத்தியங்களுக்கு நாட்டை அடகு வைக்கும் அரசியல் பொருளாதாரக் கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றது. இலங்கை அரசு இதற்குச் சளைத்ததல்ல என்பது அனைவரும் அறிந்ததே.

இப்பொதுவான நலன் காரணமாக இவர்கள் அனைவருமே சுதந்திர தேசங்களின் உருவாக்கத்தை எதிர்க்கின்றனர். அதற்கான விடுதலைப் போராட்டங்களை ஒடுக்குகின்றனர். இவர்களது கூட்டுச் சதியே கிட்டுவின் கொலையாகும்.

எனவே தமிழீழ விடுதலைப் போராட்டமானது இலங்கை அரசுக்கு எதிரானது மட்டுமல்ல, இந்திய விஸ்தரிப்புவாத அரசுக்கும், ஏகாதிபத்தியத்தியங்களுக்கும் எதிரானது என்பதே கிட்டுவின் கொலை தரும் படிப்பினையாகும். இக்கூட்டு ஒடுக்குமுறையாளர்களை எதிர்த்து தமிழீழ விடுதலையை வென்றெடுக்க ஆளும்கும்பல்களையும் அரசுகளையும் சார்ந்து இருப்பதற்குப் பதிலாக ஒடுக்கப்படும் மக்களையும், விடுதலைப் போராட்ட, புரட்சிகர சக்திகளையும் சார்ந்திருப்பது அவசியமானதாகும்.

இதுவே தாம் எடுத்துக்கொண்ட பணியை நிறைவேற்றத் தமது உயிரையே துச்சமெனமதித்து வீரமரணம் அடைந்த விடுதலைப் புலிகளுக்கு நாம் செலுத்தும் அஞ்சலியாகும்.

## பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மரணம்

யாழ்ப்பாணத்தின் பிரபல பொருளியல் ஆசிரியராக வாழ்ந்து, EPRLF இனால் சுட்டுக் கொல்லப்பட்ட திரு.நா.கிருஷ்ணானந்தன் அடிக்கடி தன் மாணவர்கட்குச் சொல்லுவார்: "தனிநபர் ஒருவ ரால் சுயபுத்தியைக் கொண்டு மட்டும் இது சாத்தியப்படும் அல்லது சாத்தியப்படாது என்று சொல்லக்கூடிய ஒரு விடயத்தை, ஒன்பது பேர் கூடி ஒன்றரை வருடங்கள் இழுத்தடித்து பின்பு சாத் தியமா, இல்லையா என்று சொல்வதே தெரிவுக்குழு" என்று.

பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுகளைக் கண்டு அதிர்ச்சியடைந்து போவதற்குத் தமிழ் மக்கள் அடிமுட்டாள்களோ அல்லது அநுபவமற்றவர்களோ அல்லர். விடுதலைப் புலிகளின் தலைவரின் வார்த்தைகளில் சொன்னால் – "கொழும்புக் குழுக்களாலேயே ஏற்றுக்கொள்ளமுடியாத தீர்வுகளை நாங்கள் எங்ஙனம் ஏற்போம் என்று நம்புகின்றீர்கள்?" இதனைப் புரிந்துகொள்ள முடியாதவர்களுக்காக தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் உதயசூரியன் சின்னத்தில் எம்.பி.யான கம்யூனிஸ்ட் கட்சி (மாஸ்கோ) திரு.நவரத்தினத்தின் வார்த்தைகளைத் தருகின்றோம். "எங்களுடனேயே பேசமாட்டாத நீங்களா பிரபாகரனுடன் பேசிப் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்கப் போகின்றீர்கள்?"

## மாற்றுப் பிரதிகள்:

'பனிமலர்' பிறதமிழ்ப்பத்திரிகை சஞ்சிகை வெளியீட்டாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அவர் களிடமிருந்தும் பனிமலர் பிரதிகளை எதிர்பார்க்கிறது.

Panimalar 7
(Snow Blossom)
A Tamil Magazine
Published By:
Tamils New Cultural Group
BM PANIMALAR
LONDON
WC1N 3XX
UK.

Type - Set by:
R.Gurunathan
S.Selvi
Printed By:
Set Line Data Ltd.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவசேகரம் பிரிந்து செல்கிறார்

சபேசன், அருட்குமார்,
சக ஆசிரியர்கள்,
பனிமலர்

அன்புக்குரிய சபேசன், அருட்குமார்,

பனிமலரின் ஆசிரிய குழுப் பொறுப்பினின்று ஒதுங்கும் என் முடிவை ஏற்றமைக்கு நன்றி. எனினும் என் விலகல் பற்றிய வீண் வதந்திகள் பனிமலரைப் பாதிக்கக் கூடாது என்பதற்காக அதுபற்றிய விளக்கத்தை முன்வைப்பது நல்லது என்று நம்புகிறேன். உங்களிடம் நேரில் விளக்கியபடியே, பனிமலரில் வரும் விஷயங்களுடன் எனக்கு இருக்கக்கூடிய கருத்து முரண்பாடுகள் எவ்வகையிலும் என் முடிவுக்குக் காரணமில்லை. பனிமலரின் குறைபாடுகள் அடிப்படையில் நிர்வாகத் தொடர்பானவை. பனிமலர் ஒழுங்காக வரும் என்ற நம்பிக்கையை வாசகர்கள் மத்தியில் ஏற்படுத்தத் தவறிவிட்டோம். இதன் விளைவாகப், பனிமலர், நாங்கள் எதிர்பார்த்த விதமாகப் பல தரப்பட்ட சிந்தனைகட்கு ஒரு களமாக அமையவில்லை. அதற்கு எழுத வேண்டியவர்களை எழுத உற்சாகப்படுத்த அவசியமான தேவைகளில் முக்கியமான ஒன்று, பத்திரிகை ஒழுங்காக வரும் என்ற நம்பிக்கை. அதை உறுதி செய்யும் ஆற்றல் நம்மிடமில்லை. எனவே பனிமலர் தொடங்க விரும்பும் விவாதங்களோ ஆராய விரும்பும் பிரச்சினைகளோ முறையாகச் செய்யப்படக்கூடிய வாய்ப்பு இல்லை. நான் ஏற்றுக்கொண்ட பொறுப்புக்கட்கும் மேலாக என்னால் எதையுஞ் செய்ய இயலாது. எனவே பனி மலரின் நிர்வாகக் குறைபாட்டை நிவர்த்திப்பதில் என்னால் அதிகம் உதவ இயலாது. நிர்வாகப் பலவீனத்தின் விளைவு பனிமலரின் உள்ளடக்கத்தைப் பாதிக்கும் நிலையில், குறைபாடுகட்கு என்னாற் பொறுப்பேற்க முடியாத காரணத்தால் நான் விலகுவதுதான் சரியான காரியமாகப் பட்டது.

நான் இதுவரை காலமும் செய்துவந்த வகையிலான காரியங்களை நீங்கள் விரும்பினால், ஆசிரியப் பொறுப்பில்லாமல் என்னாற் செய்ய முடியும். வழமைபோல் என் கருத்துக்களைப் பிரசுரத்துக்கோ உங்கள் கவனத்துக்கு மட்டுமோ தெரிவிக்கவுந் தவறமாட்டேன் என்றே எண்ணுகிறேன். பனிமலர் இனிமேலிருந்து ஒழுங்காக வெளிவரவும் தன் தரத்தை மேலும் உயர்த்தவும் நீங்கள உரிய நடவடிக்கை எடுப்பீர்கள் என்று நம்புகிறேன். பனிமலருக்கும் உங்களுக்கும் என் நல்வாழ்த்துக்களுடன்,

அன்புள்ள,
சிவசேகரம்.

பனிமலரின் ஆசிரியர் குழுப் பொறுப்பிலிருந்து விலகும் சிவசேகரம் அவர்களது முடிவு குறித்து சக ஆசிரியர்களாகிய எங்களது கருத்துக்கள் கீழ்வருமாறு:

கடந்த காலத்தில் பனிமலரின் தொடர்ச்சியான வெளியீட்டைப் பாதித்த காரணங்களாக (1) அரசியல் நிலைப்பாட்டுத் தவறுகள், 2) நிர்வாக ஒழுங்கீனங்கள் ஆகிய இரண்டையும் நாங்கள் இனங்காண்கின்றோம்.

அரசியல் நிலைப்பாட்டுத் தவறுகள் எனும்போது, உள்நாட்டு மற்றும் சர்வதேச நிலை குறித்து நாம் வெளியிட்ட கருத்துக்கள் மக்கள் நலனுக்கு விரோதமாக, மக்களை ஒடுக்குவோரால் பயன்படுத்தத்தக்க வகையிலமைந்திருந்ததென்றே நாங்கள் கருதுகின்றோம். இவ்வகையிலான அரசியல் நிலைப்பாட்டுத் தவறுகளினால் பனிமலர் வாசகர்களிடையே இருந்து எழுத்தாளர்களையும், விநியோகஸ்தர்களையும், நிதி உதவுவோரையும் தேடிக்கொள்ளவோ உருவாக்கவோ எம்மால் முடியவில்லை. அவர்களை ஆதாரமாகக் கொண்ட ஒரு நிர்வாக ஒழுங்கமைப்பையும் உருவாக்க முடியவில்லை. ஆசிரியர் குழுவே பனிமலர் குறித்த எல்லாப் பணிகளையும் செய்ய வேண்டியிருந்தது. ஆனால் ஆசிரியர் குழுவுக்கும் இவ்வகையிலானதோர் நிர்வாக ஒழுங்கமைப்பை உருவாக்கும் நோக்கம் ஆரம்பமுதலே இருக்கவில்லை.

சிவசேகரம் அவர்கள் நிர்வாக ஒழுங்கீனங்களையே சஞ்சிகையின் அடிப்படைக் குறைபாடாக அடையாளம் காட்டுகின்றார். பனிமலரின் கடந்தகால அரசியல் நிலைப்பாடுகள் குறித்த பிரச்சினைகளை அவர் நேரில் பேசியபொழுது ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்த அரசியல் முரண்பாட்டினை ஆசிரியர் குழுவிற்குள்ளான விவாதங்கள் மூலமும், சஞ்சிகையிலேயே முரண்பட்ட கருத்துக்களை இடம்பெறச் செய்வதனூடாகவும் அணுகியிருக்க முடியுமென நாங்கள் நம்பினோம். இதனால் முரண்பாடுகளுடன் ஐக்கியப்பட்டு ஆசிரியர் குழுவிலிருந்து செயற்படுமாறு அவரைக் கோரினோம். இதனை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆசிரியர் குழுவிலிருந்து விலகும் அவரது முடிவு ஆசிரியர் குழுவிற்குள்ளான விவாதங்கள் என்ற முதல் வாய்ப்பை இழக்கச் செய்துவிட்டது.

இரண்டாவது வாய்ப்பான சஞ்சிகையில் முரண்பட்ட கருத்துக்களை விவாதிப்பதற்கு இன்னமும் வாய்ப்புகள் உள்ளன. தொடர்ந்து வரும் இதழ்களில் விவாதங்களில் கலந்துகொள்வதனூடாக இவ் அரசியல் முரண்பாடுகளை சிவசேகரம் அவர்கள் விவாதிப்பாரென நாங்கள் நம்புகின்றோம்.

மேலும் சிவசேகரம் அவர்கள் இயன்ற அளவுக்கு எதிர்காலத்திலும் பனிமலர் தொடர்பான விடயங்களில் ஒத்துழைப்பாரென்பது நம்பிக்கையூட்டுமொரு விடயமாகும். நாங்கள் அவரோடிணைந்து செயற்பட்ட காலப்பகுதியில் வெளியான நான்கு இதழ்களிலும் அவர் முக்கிய பங்காற்றினார் என்பதை இக்கணத்தில் சுட்டிக்காட்டுகின்றோம். இதுவரை காலமும் எம்மோடிணைந்து ஆசிரியர் குழுப் பொறுப்பு உட்படப் பலவழிகளில் செயல்பட்டமைக்காக எமது நன்றிகள் அவருக்கு என்றும் உரித்தானவை.

ம.அருட்குமாரன்
நா.சபேசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிமேல் குஸ்மானின் வழக்குரைஞருக்கு ஆயுள் தண்டனை


அபிமேல் குஸ்மானின் வழக்குரைஞர் Dr.Alfredo Crespo கடந்த ஜனவரி மாதம் 11ம் தேதி 'டின்கோட்' ஆல் கைது செய்யப்பட்டார். பிஜிமோரி அரசு இவர் மீது தேசத்துரோகக் குற்றம் சாட்டி இவருக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

பெருநாட்டு அரசியல் கைதிகளுக்காகப் பாடுபடும் 'ஜனநாயக வழக்குரைஞர் சங்கத்தின்' இரு உறுப்பினர்களும் இதே தினத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர். இச்சங்கத்தின் செயற்பாடுகள் தொடருமானால் ஏனையவர்களும் கைது செய்யப்படுவர் என அரசுத்தலைவர் பிஜிமோரி எச்சரித்துள்ளார்.

இவை பெருவின் அரசியல் கைதிகளின் சட்டபூர்வமான பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்குவதோடு, வழக்குரைஞர்களின் சட்டபூர்வ செயற்பாடுகளையும் நசுக்குவதாக உள்ளது. மேலும் இது அபிமேல் குஸ்மானின் உயிர்ப் பாதுகாப்புக்கு விடுக்கப்பட்டிருக்கும் அச்சுறுத்தலாகும்.

இதனால் அபிமேல் குஸ்மானின் உயிரைப் பாதுகாக்கும் இயக்கத்தை முன்னெடுக்கும் 'சர்வதேச அவசர காலகமிட்டி' (International Emergency Committee - IEC), இச்செயலைக் கண்டிக்கும் நடவடிக்கைகளில் இறங்குமாறு கோரியுள்ளது.

**Don't Snuff Out the Rights of Political Prisoners in Peru**



**Defend the Life of Abimael Guzmán**

**When will Amnesty Act?**

## நிதி சேகரிப்பு மாநாடு

பெருவிய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் அபிமேல் குஸ்மான் இராணுவ சர்வாதிகாரி பிஜிமோரியின் பிடியில் எந்நேரமும் உயிர் ஆபத்தை எதிர்நோக்கிய வண்ணம் இருக்கிறார். இவரது உயிரைப் பாதுகாக்கும் இயக்கத்தை முன்னெடுக்கும் IEC, தனது நடவடிக்கைகளுக்கான நிதியைத் திரட்ட பெப்ரவரி 27 - 28இல் ஜேர்மனியின் கிரெபெல்ட் நகரில் (Krefeld - Germany) மாநாடு ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

பெருவில் அமெரிக்கத் தலையீடு, அமெரிக்காவின் 'புதிய உலக ஒழுங்கமைப்பின்' கீழ் மக்கள் இயக்கஙளும் மனித உரிமை அமைப்புக்களின் பாத்திரமும், பெருவியப் புரட்சியில் பெண்களின் பங்கு போன்ற தலைப்புக்களில் உரையாடல்கள் இடம்பெறவுள்ளது.

மேற்குலகப் பத்திரிகைகளின் இருட்டடிப்புக்கும், பிஜிமோரியின் இராணுவ சர்வாதிகாரத்துக்கும் மத்தியில் பெருப்புரட்சியினதும், அபிமேல் குஸ்மானினதும் உண்மை நிலையை உலகமெங்கும் எடுத்துச் சொல்ல பெருந் தொகையான நிதி தேவையாக உள்ளது. இம்மாநாட்டில் பங்குபற்றி IEC இன் நடவடிக்கைகளை அறிந்து கொள்ளுமாறும், நிதி ஆதரவு வழங்குமாறும் IEC கோரியுள்ளது.

தொடர்புகளுக்கு:
ஜேர்மன்: தொலைபேசி / Fax இலக்கம் - 49-203-401584
லண்டன்: தொலைபேசி / Fax இலக்கம் - 44-71-482-0853
முகவரி: BCM - IEC,
27, Old Alucester St,
London WC1N 3XX.
England.

## மன்னிப்புச் சபையின் மாற்றாந்தாய் மனப்பான்மை


சர்வதேச மன்னிப்புச்சபை அபிமேல் குஸ்மான் விடயத்தில் மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து வருகிறது. இதனை அம்பலப்படுத்தியும், அபிமேல் குஸ்மானுக்கு சர்வதேச சட்டவிதிகள் வழங்கும் அரசியல் கைதிகளுக்கான அந்தஸ்தை வழங்கும்படி கோருமாறு மன்னிப்புச்சபையை நிர்ப்பந்தம் செய்யவும் IEC ஆல் வெளியிடப்பட்ட தபால் அட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரு - ஒளிரும் பாதையின் தலைவர் எந்த உலகிற்கு மிகப் பயங்கரமான மனிதன்?

க.கலியுகவரதன்



அபிமேல் குஸ்மான் - தோழர் கொன்சாலோ - லத்தீன் அமெரிக்க நாடான 'பெரு'வின் கம்யூனிஸ்ட் கட்சியின் (ஒளிரும் பாதை) தலைவர். இவர் கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 12ம் தேதி பெருவின் தலைநகர் லிமாவில் கைது செய்யப்பட்டார். பெரு அரசின் அரசியல் பொலிஸான 'டின்கோட்' இவரைக் கைது செய்தது.

தோழர் கொன்சாலோவை மேற்கு நாடுகளின் பத்திரிகைகள் "20ம் நூற்றாண்டின் கடைசிக் கம்யூனிஸ்ட் தலைவர்", "லத்தீன் அமெரிக்காவின் முதல் பொது எதிரி", "உலகின் மிகப் பயங்கரமான மனிதன்" என வர்ணித்தன. இவரைக் கைது செய்ததைப் பாராட்டி 'டின்கோட்' இற்கும், பெருவின் அரசுத் தலைவர் பிஜிமோரிக்கும் வாழ்த்துத் தெரிவித்தன. மேற்கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆலோசனைகள் வழங்கின.

பிரித்தானியாவின் பழம் பெரும் முதலாளித்துவ ஏடான The Economist (19.9.1992), "To keep Mr.Guzman alive would be a huge risk; his escape or rescue, or forced swapping for some big - wig the shining path had kidnapped would be a profound humiliation" என எழுதியது.

செப்ரெம்பர் மாதம் 24ம் தேதி அமெரிக்க செனற் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் "ஒளிரும் பாதை என அறியப்படும் ஜனநாயக விரோத, வன்முறைக் குழுவுக்கெதிராக போராடப் பெருவிய அரசாங்கம் கொண்டுள்ள உறுதிப்பாட்டை ஆதரிப்பதாக" பிரகடனம் செய்தது. அத்துடன் 'டின்கோட்'டிற்கு தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தது. அமெரிக்க அரசுத் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் ஒக்ரோபர் 20ம் தேதி தெரிவித்த கருத்து இதனை உறுதி செய்வதாக அமைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"Mr.Guzman is the leader of the vicious terrorist movement in the western hemisphere.. We have no comment on the judicial proceedings by which he was tried."

லிமாவில் உள்ள Desco ஆராய்ச்சி நிறுவனத்தின் தலைவர் பின்வருமாறு கூறுகிறார்: "ரசியாவிலும், ஐரோப்பாவிலும் கம்யூனிஸம் வீழ்ச்சியடைந்ததற்குப் பின்னால் உலகின் புரட்சிகர சிந்தனையின் மையமாக 'ஒளிரும் பாதை' - பெருவிய கம்யூனிஸ்ட் கட்சி - விளங்குகிறது. மேலும் சர்வதேச கம்யூனிஸ இயக்கத்தில் முன்னணிப் பாத்திரம் ஆற்றுகிறவராக அபிமேல் குஸ்மான் உருவாகிவிட்டார்."

இவரது கைது பற்றி எழுதிய கொழும்புப் பத்திரிகைகளும், அடிப்படையில் இக்கருத்துக்களையே பிரதிபலித்தன. திருவாளர் ராம் FRONT LINE சஞ்சிகையில், தோழர் - கொன்சாலோவையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனையும் ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்தார். இறுதியாக இருவருமே பயங்கரவாதிகள் என நிறுவினார்.

கனடாவில் வெளிவரும் 'தாயகம்' பத்திரிகை இந்தப் பிரச்சாரத்தை அப்படியே வாந்தி எடுத்தது. அது தான் தேடிக்கண்ட உண்மைகளாக கூறுவதாவது, "மாவோயிஸ இயக்கமான 'ஷைனிங் பாத்' கடந்த 12 வருடங்களாக பெருவில் கெரில்லா யுத்தத்தில் ஈடுபட்டுள்ளது. இவர் செய்தது போலவே இவருக்கும் செய்ய வேண்டுமென பெருவியர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். கடந்த வாரம் நடத்தப்பட்ட (யாரால்?) கருத்துக் கணிப்பின்படி 55% பேர் (பெரும்பான்மை! என்னே தாயகத்தின் ஜனநாயகம்!!) இவர் கொல்லப்பட வேண்டும் என்று கூறியுள்ளனர்... கடந்த 12 வருட போராட்டத்தில் 25 ஆயிரம் பேர் இறந்ததுடன், 22 பில்லியன் டொலர் சேதமும் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ளது... இவரது கைது பலத்த பாதிப்பை ஏற்படுத்தினால் இன்னும் பத்து வருடங்களுக்கு(!!) போர் நீடிக்கும் என்று கூறப்படுகின்றது."

இப்படியொரு உலகம் குதூகலித்தது.

தோழர் கொன்சாலோ கைது செய்யப்பட்டு மூன்று தினங்களில் 'கொன்சாலோவின் உயிரைப் பாதுகாக்க விண்ணையும் மண்ணையும் உலுப்புவோம்' என்ற முழக்கத்தின் கீழ் அவரது உயிரைப் பாதுகாப்பதற்கான இயக்கத்துக்கு Revolutionary International Movement அறைகூவல் விடுத்தது. உலகு தழுவிய இவ்வியக்கத்தை ஒருங்கிணைக்கும் பணியை International Emergency Committee பொறுப்பேற்று நடத்துகின்றது. இக்கமிட்டியினால் ஜனவரி மாதம் 12ம் தேதிவரை வெளியிடப்பட்ட இருபத்திரண்டு Emergency Bulletin இலும் தரப்பட்டுள்ள விபரங்களின்படி பல இலட்சக் கணக்கான மக்கள் உலகெங்கும் இவ்வியக்கத்தில் பங்கு கொண்டுள்ளனர். இவர்களில் கம்யூனிஸ்டுகள், தேசிய விடுதலைப் புரட்சியாளர்கள், ஜனநாயக சக்திகள், அறிவுத்துறையினர், பாராளுமன்றப் பிரதிநிதிகள், மாணவர்கள், மனித உரிமை வாதிகள், சட்ட வல்லுனர்கள், வைத்தியர்கள்... என பல தரப்பட்ட மக்கட் பிரிவினரும் அடங்குகின்றனர். கையெழுத்து இயக்கத்தில் பல ஆயிரக்கணக்கானோர் பங்கு கொண்டுள்ளனர். உலகின் பல பாகங்களிலும் கண்டனக் கூட்டங்கள், சுவரொட்டி இயக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இவ்வியக்கம் உலகெங்கும் ஜனநாயக உணர்வு கொண்ட மக்களிடையே பரவலாகியும் வலுவடைந்தும் வருகிறது.

இப்படியொரு உலகம் கொதித்தது.

முன்னவர்களுக்கு தோழர் கொன்சாலோ முதலாம் எதிரியாகவும், பயங்கர மனிதனாகவும், ஒழித்துக்கட்டப்பட வேண்டியவராகவும் இருக்கிறார் என்றால் அதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. பெருவின் உள்நாட்டு நிலைமையையும் இன்றைய சர்வதேசிய நிலைமையையும் ஆராய்ந்தால் இந்தக் காரணம் புரியும். முதலில் பெருவின் நிலைமையை எடுத்துக் கொள்வோம்.

## அந்நிய நிதி நிறுவனங்கள்

அந்நிய நிதி மூலதனம் எடுத்துள்ள அவதாரங்கள் பல. அவற்றில் சர்வதேச நிதி நிறுவனமும் (International Monetary Fund), உலக வங்கியும் பிரதான பிறவிகள் ஆகும். உலக வங்கியில் 115 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. உறுப்பு நாடுகள் செலுத்திய மூலதனப் பங்குக்கு ஈடாக அவை வாக்குரிமையைப் பெற்றிருக்கின்றன. அமெரிக்கா, ஜப்பான், மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, கனடா ஆகிய ஏகாதிபத்திய நாடுகள் மட்டும் 51%இற்கு மேற்பட்ட வங்கி மூலதனத்தையும் வாக்குரிமையையும் பெற்றிருக்கின்றன. இதில் அமெரிக்காவுக்கு மட்டும் 21% மூலதனப் பங்கும் வாக்குரிமையும் உள்ளது. சர்வதேச நிறுவனத்திலும் இதே 115 நாடுகளுமே உறுப்பினர்களாக உள்ளன. இதில் அமெரிக்கா மட்டும் 37.6% மூலதனப் பங்கையும் வாக்குரிமையையும் பெற்றிருக்கின்றது.

இந்நிதி நிறுவனங்கள் ஏதோ ஏழைநாடுகளுக்கு உதவும் பரோபகாரிகளைப் போல தம்மைக் காட்டிக் கொள்ள முயலுகின்றன. ஆனால் உண்மை அதுவல்ல. இந்நிதி நிறுவனங்களில் 51%இற்கு மேற்பட்ட மூலதனத்தையும் வாக்குரிமையையும் கொண்டிருக்கிற ஏகாதிபத்திய நாடுகள் - குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒடுக்கப்பட்ட நாடுகளைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கான கருவியாகவே இவ்வமைப்புக்கள் செயல்படுகின்றன. அந்நிய நிதிமூலதன ஏற்றுமதிக்கான கருவியாக இவ்வமைப்புகள் உள்ளன.

உலக வங்கியிடமிருந்து பின்தங்கிய நாடுகளுக்கு (ஒடுக்கப்பட்ட சார்பு நாடுகளுக்கு) தரப்பட்ட பணத்தைவிட, தவணை - வட்டி மூலம் அதிகமான பணம் வங்கிக்கு இந்நாடுகளால் செலுத்தப்பட்டுள்ளது. 1991இல் மட்டும் கூடுதலாக 1,677 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி வசூலித்துள்ளது. செலுத்துகிற பணத்தில் 100க்கு 46 பங்கு வட்டிக்கு மட்டுமே சென்று விடுகின்றது.

இவ்விதமாக ஒடுக்கப்படும் நாடுகளின் செல்வ வளங்களையும், நாட்டு மக்களின் உழைப்பையும் சூறையாடுவதற்கு ஏற்ற விதத்தில் பொருளாதாரக் கொள்கைகளை வகுத்து அந்நாடுகளை அமுலாக்கும்படி அந்நிய நிதி நிறுவனங்கள் நிர்ப்பந்திக்கின்றன.

இந்நாடுகளின் ஆளும் வர்க்கங்கள் எஜமான விசுவாசத்துடன் அவற்றை நிறைவேற்றுகின்றன. பெரு- இதற்கு விதிவிலக்கல்ல. எனவே சர்வதேச நிதி நிறுவனம் வகுத்தளித்த பொருளாதாரக் கொள்கைகளுக்கும், பெருவின் ஆளும் கும்பல் அவற்றினை அமுலாக்கி ஏற்படுத்திய விளைவுகளுக்கும் ஏகாதிபத்திய நாடுகளும், பெருவின் ஆளும் கும்பல்களுமே பொறுப்பேற்க வேண்டும்.

## பெரு அமுலாக்கிய IMF கொள்கைகள்:

பெரு நாட்டின் வரலாறு, கடந்த 20 ஆண்டுகளாக எதிர் நோக்கி வருகிற பொருளாதார நெருக்கடிகளை இதற்கு முன்னர் கண்டதில்லை. 1975இல் தீவிரமடைந்த இந்நெருக்கடி இன்றுவரை தொடர்கிறது. 70களின் ஆரம்பத்தில் பெருந்தொகையான அந்நிய மூலதனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



24.10.92, நியூ டெல்லி: பெருவியன் தூதரகம் முன்றல் ஆர்ப்பாட்டம் செய்யும் நேபாள் பெண்கள்

பெருவுக்குள் நுழைந்தது. முதல் ஐந்து ஆண்டுகளில் பொதுத்துறையில அங்கிய மூலதனத்தின் அளவு நான்கு மடங்காக - US$ 4 பில்லியன் - அதிகரித்தது. பெருவின் எண்ணெய் வளத்தின் மீது காதல் கொண்ட ஐரோப்பிய வங்கிகள் இம்மூலதனத்தைக் கொட்டின. 1970இல் 14.5%மாக இருந்த வர்த்தக வங்கிகளின் மூலதனம் 1975இல் 40%ஐத் தாண்டியது.

1968 முதல் (1980 வரை) பெருவை ஆண்ட இராணுவ ஆட்சியாளர்கள் பெரும் கடன் சுமையில் நாட்டை வீழ்த்தினர். இதைப் பயன்படுத்தி 1977இல் தனது 'ஸ்திரப்படுத்தும் திட்டத்தை' (Stabilisation Programme) அமுலாக்கும்படி சர்வதேச நிதி நிறுவனம் நிர்ப்பந்தித்தது. இத்திட்டத்தின் கீழ் பெருவின் மூலவளத்தை அபகரிப்பதற்கான இரு பாரிய முதலீட்டுத் திட்டங்கள் - Northern oil pipeline and the giant Cuajane Copper mine - மூலம் ஏற்றுமதி இருமடங்காக அதிகரித்தமையால் பொருளாதார நெருக்கடி தற்காலிகமாகச் சமாளிக்கப்பட்டது.

July 1980இல் தெரிவு செய்யப்பட்ட Belaundi அரசாங்கம் 1981இல் மூன்று வருட Extended Fund Facility என்ற உடன்படிக்கையை IMF உடன் செய்தது. இவ் உடன்படிக்கை பின்வரும் அம்சங்களைக் கொண்டிருந்தது.

*அங்கிய முதலீட்டுக்கான கட்டுப்பாடுகளை தளர்த்தல்.

*அங்கிய வர்த்தகத்தை தாராளமயமாக்குதல்.

*நிதி நிலைப்பற்றாக் குறையைக் குறைத்தல் - (பொதுச் செலவினங்களை வெட்டுதல்).

*பெருநாட்டுப் பணத்தின் பெறுமதியைக் குறைத்தல்.

*நிதிக்கட்டுப்பாட்டை இறுக்கு தல்.

இக்கொள்கைகளே எழுபதுகளின் நடுப்பகுதியில் இருந்து பெருவின் பொருளாதார வளர்ச்சிப் பாதையைத் தீர்மானித்தன. கடந்த இருபது ஆண்டுகளாக பெருவிய நாடு சந்திக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கான காரணங்கள் இக்கொள்கைகளிலேயே காணக்கிடக்கின்றன. எனவே இக்கொள்கைகளையும் இவற்றின் விளைவுகளையும் விரிவாக ஆராய்வோம்.

## கொள்கைகளும் விளைவுகளும்:

அங்கிய வர்த்தகத்தைத் தாராளமயமாக்கியதும், பணப்பெறுமதியைக் குறைத்ததும் இறக்குமதிப் பொருட்களின் விலையை சடுதியாக உயர்த்தின. ஏற்றுமதிப் பொருட்களின் விலை பெருமளவு வீழ்ச்சியடைந்தது. இதனால் வெளிவர்த்தகப் பற்றாக்குறையேற்பட்டது. இதனை ஈடுசெய்ய மீண்டும் மீண்டும் அங்கியக் கடனில் தங்கியிருக்க நேரிட்டது. இவ்வாறு 1979ம் ஆண்டு முதல் 1986ம் ஆண்டு வரை முறையே (1979) 9334, (1981) 9689, (1983) 12520, (1985) 13794, (1986) 14398 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அங்கியக் கடன் அதிகரித்து வந்தது. 1979ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1986ம் ஆண்டின் அளவு 54% அதிகரிப்பாகும். 1971ம் ஆண்டின் 4132 மில்லியன் அமெரிக்க டொலர்களுடன் ஒப்பிடுகையில் இது 248% அதிகரிப்பாகும். 1977ம் ஆண்டிலிருந்து 1986ம் ஆண்டுவரையில் மொத்தத் தேசிய உற்பத்தியில் அங்கியக் கடனின் விகிதாசாரத்தின் சராசரியானது 70% ஆகும்

எனவே தாராளமயமாக்கல், பணப்பெறுமதிக் குறைப்பு என்ற கொள்கைகள், அங்கிய மூலதனத்தில் தங்கிவாழும் நாடாகப் பெருவை மாற்றி விட்டதை இவ்விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

நிதிநிலைப் பற்றாக்குறையை குறை என்பது இந்நிறுவனங்களின் பிரதான நிபந்தனையாகும். இந்நிபந்தனையை ஏற்கச் செய்வதன் மூலம் கட்டுமானத்துறையில் முதலீடு செய்வது உள்ளிட்ட அரசின் முதலீட்டுச் செலவைக் குறைத்து விட வேண்டும் என்பது அவற்றின் குறிக்கோள். இது எவ்வாறு குறைக்கப்படுகிறது?

அரசுத் துறை நிறுவனங்களை விற்றும், மக்களின் நல்வாழ்வுத் துறைச் செலவினங்களை குறைத்தும் செய்யப்படுகிறது.

அரசுத் துறை ஆயினும் சரி, தனியார் துறை ஆயினும் சரி, பெருவின் முதலீட்டுத் திட்டங்களில் பெரும் பங்குதாரர்களாக இருப்பவை அங்கியக் கம்பனிகளே. இவ்வாறு முதலீட்டுத் திட்டங்களை ஏகாதிபத்தியங்களுக்குத் தாரை வார்த்து அவை சொந்தத் தேசத்தின் நன்மைக்காகவன்றி ஏகாதிபத்தியங்களின் நன்மைக்காகவும், இலாபத்திற்காகவும் திட்டமிடப்பட வழிசமைத்தனர்.

மக்களின் நல்வாழ்வுத் துறைக்கு என்ன நடந்தது என்பதைப் பார்ப்போமா? பொதுச் சுகாதாரம்: 1972 முதல் 1984 வரையிலான 13 ஆண்டுகளில் மொத்தச் செலவினத்தில் பொதுச் சுகாதாரத்துக்கு ஒதுக்கப்பட்ட விகிதாசாரம் முறையே, (1972) 5.1%, (1974) 4.5%, (1976) 5.4%, (1978) 4.5%, (1980) 4.8%, (1982) 4.4%, (1984) 4.3% ஆகும். 1984இல் ஒதுக்கப்பட்ட விகிதாசாரம் 13ஆண்டுகளுக்கு முந்திய ஒதுக்கீட்டை விடவும், 16% குறைவானதாகும். இதன் விளைவாக வறுமை, போஷாக்கின்மை, பொதுச் சுகாதாரத்தின் போதாமை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்றவை உருவாக்கும் நோய்களால் மக்கள் மாண்டு மடிந்தனர். பெருவின் மொத்த மரணத்தில் அரைவாசிப் பேர் 5 வயதுக்குக் கீழ்ப்பட்ட பச்சிளம் பாலகர்கள் ஆகினர்.

கல்வித் துறைக்கான ஒதுக்கீட்டைக் கவனியுங்கள்: (1972) 18.5%, (1974) 18.2%, (1976) 16.8%, (1978) 11.6%, (1980) 13.2%, (1982) 13.7%, (1984) 11.6% ஆகும். 1984இல் ஒதுக்கப்பட்ட விகிதாசாரம் 13 ஆண்டுகளுக்கு முந்திய ஒதுக்கீட்டை விடவும் 37% குறைவான தாகும். தலைநகர் லிமாவின் நகர சபைப் பகுதியொன்றின் பெண் மேஜர் கேட்கிறார் "பள்ளி செல்லும் வயதில் இருக்கும் 28000 இளைஞர்களில் 80 பேருக்கு மட்டுமே எங்களால் தொழில் முறைப் பயிற்சி அளிக்க முடிகிறது. நாங்கள் சட்டத்தால் தண்டிக்கப்பட இயலாத இளம் வயதில் குற்றம் புரிவோரை அதிகளவில் கொண்டிருக்கின்றோம் என்பது ஆச்சரியப்படத் தக்கதா?"

இவை மட்டுமல்ல, மக்களின் பிற இன்றியமையாத தேவைகளான குடியிருப்பு வசதி, குடிதண்ணீர், மின்சாரம் போன்றவற்றில் கூட கைவைத்துள்ளனர் ஆட்சியாளர்கள்.

எனவே நிதி நிலைப் பற்றாக் குறையை குறை என்ற நிபந்தனையில் ஏகாதிபத்தியங்களுக்குக் கிடைத்தது பெருவின் தொழிற் துறை. பெரு மக்களுக்குக் கிடைத்ததோ படிப்பறிவின்மையும், பட்டினிச்சாவும், கொலரா போன்ற கொடிய நோய்களுமே.

ஒடுக்கப்படும் தேசங்களது உழைக்கும் மக்களின் உழைப்புச் சக்தியின் விலையை எதேச்சாதிகாரமான முறையில் குறைப்பதற்கான உபாயங்களில் ஒன்றாக அத்தேசங்களின் சொத்தின் பெறுமதியைக் குறைப்பதை இந்நிதி நிறுவனங்கள் வழக்கமாக கொண்டுள்ளன. உலக வங்கியின் ஆலோசனையின் பேரில் 1987ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25%உம், டிசம்பரில் 50%உம் பெரு பணத்தின் பெறுமதி குறைக்கப்பட்டது. வேறு விதமாகச் சொன்னால், 1987ம் ஆண்டு டிசம்பருக்கு முன்னால் ஒரு மணி நேர உழைப்புச் சக்திக்குக் கொடுத்த அதேவிலையில் டிசம்பருக்குப் பின்னால் இரண்டு மணிநேர உழைப்புச் சக்தியை வாங்க முடியும்.

மறுபுறம் மெய்யான கூலியும் குறைந்துள்ளது. அரசாங்க ஊழியர்களின் 1987ம் ஆண்டின் கூலி 1982இன் கூலி மட்டத்தை விட கிட்டத்தட்ட 40% குறைவானதாகும். நிலக்கரித் தொழிலாளர்களின் கூலி 1984இன் பிற்பகுதிக்கும் 1980 இன் பிற்பகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் 5% வீழ்ச்சியடைந்துள்ளது. அமைப்பாக்கப்பட்ட தொழிலாளர்களின் விடயத்திலும் நிலமை இதுதான். இரண்டு முதியவர்களையும் நான்கு குழந்தைகளையும் கொண்ட ஒரு சராசரி பெருவியக் குடும்பத்தின் அடிப்படைத் தேவைகளை - உணவு, இருப்பிடம், தளபாடம், போக்குவரத்து, உடை, கல்வி, சுகாதாரம் - பூர்த்தி செய்ய மாதாந்தம் 200 பவுண்களுக்கு ஈடான தொகை தேவைப்படுகிறது. எனினும் அமைப்பாக்கப்பட்ட தொழிலாளர்களின் சராசரியான மாதாந்த கூலி 117 பவுண்களாகவே இருக்கிறது.

இந்த மெய் விபரங்கள், பெருமக்களின் பொருளாதார வாழ்வின் கீழ் நிலையைக் காட்டுகின்றன; இந்நிலைமைக்கு அம்மக்களைத் தள்ளியவை அந்நிய நிறுவனங்களின் பொருளாதாரக் கொள்கைகள் என்பதை நிரூபிக்கின்றன.

இக்கொள்கைகளால் நிலைநிறுத்தப்பட்ட அந்நிய நிதிமூலதன ஏற்றுமதி மூலம் ஏகாதிபத்திய நாடுகள் அடைந்த லாபத்தைக் காண மீண்டும் அந்நியக் கடன்களை நோக்குவோம்.

இக்கடன்களுக்கான வட்டியின் மூலம் அந்நிய முதலாளிகள் 'பெரு' மக்களின் உழைப்பின் உபரியை உறிஞ்சிக் கொள்கிறார்கள். ஒடுக்கப்படும் தேசங்களில் இருந்து கிடைக்கிற இந்த ஊட்டச்சத்தில்தான் ஏகாதிபத்தியங்கள் புடைத்துப் போகின்றன. அந்நியக் கடனின் தொடர்ச்சியான அதிகரிப்பும், நிதி நிறுவனங்களின் கொடுமையான வட்டி வீதமும் அரசாங்கத்தின் மொத்தச் செலவினத்தின் கடன்களுக்கான செலவின் விகிதாசாரத்தை அதிகரித்து வந்துள்ளது. 1972 முதல் 1984 வரை முறையே (1972) 26.3%, (1974) 24.1%, (1976) 16.67%, (1978) 35.6%, (1980) 31.0%, (1982) 31.4%, (1984) 44.5% ஆக இருந்திருக்கிறது.

பெரு மக்களில் ஒட்டிக்கொண்ட இந்த அட்டை அவர்களது இரத்தத்தை எவ்வாறு உறிஞ்சியிருக்கிறது என்பதை இது எடுத்துக்காட்டுகிறது.

இவ்வளவு மூர்க்கத்தமாக அம்மக்களைச் சுரண்டியவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமானால், அது அம்மக்களின் மீது அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடுவதைத் தவிர வேறு எந்த வழிகளிலும் சாத்தியமில்லை. ஏகாதிபத்தியச் சுரண்டலைப் பாதுகாக்க, பெருவிய மக்களின் மீது கொடிய அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுவதற்கான எந்திரம் தான் பெருவிய அரசும் அதன் ஆயுதப் படைகளும். இந்த எந்திரத்துக்குப் போடப்பட்ட தீனியின் அளவைப் பாருங்கள்.

International Institute for Strategic Studiesஇன் கணிப்புப்படி, 1984இல் லத்தீன் அமெரிக்க நாடுகளில் அரசாங்கச் செலவினத்தின் மிக உயர்ந்த விகிதாசாரத்தை "பாதுகாப்புத் துறைக்கு" செலவிட்ட நாடு பெரு ஆகும். மத்திய வங்கியின் விபரங்களின் படி அரசாங்க செலவினத்தில் இராணுவச் செலவின் விகிதாசாரம் 1984இல் 26% ஆகவும், 1985இல் 29% ஆகவும், 1980இல் 30% ஆகவும் இருந்துள்ளது. ஆயுதப் படைகளுக்கும் பொலிசுக்குமான செலவு 1986இல் மொத்தச் செலவினத்தின் 40% ஆகும். இது முன்னைய ஆண்டைவிட 12% அதிகரிப்பாகும்.

கடன்களுக்கான வட்டியும், இராணுவச் செலவும் உற்பத்தியோடு சம்பந்தப்படாதவை. இவற்றிற்கான செலவு அதிகரிப்பதானது பணவீக்கத்துக்கு ஒரு முக்கிய காரணியாகும். 1950 ஆண்டிலிருந்து 1975ம் ஆண்டு வரையில் வருடாந்த பணவீக்கம் 20%ஐ தாண்டியதில்லை. ஆனால் 1976இலிருந்து தொடர்ச்சியாகவும் தீவிரமாகவும் அதிகரித்து இறுதியாக 1985இல் 158%ஐ எட்டியிருக்கிறது. அதன் பொருள், பிரதானமாக கடன்களுக்கான வட்டியும், ஆயுதப் படைகளுக்கான செலவும் 70களின் நடுப்பகுதியில் இருந்து தீவிர அதிகரிப்பைக் கண்டிருக்கிறது. இதிலிருந்து பெருவிய மக்களின் மீது அந்நிய மூலதனமும் அதற்குக் காவல் புரியும் பெருவிய அரசும் செலுத்துகிற ஆதிக்கத்தின் தன்மையை உணர்ந்து கொள்ள முடியும்.

தொகுத்துச் சொன்னால், தமது நிதி நிறுவனங்கள் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியமும், பிற ஏகாதிபத்திய நாடுகளும் பெருவின் மீது செலுத்திய பொருளாதார ஆதிக்கம்

1) அந்நாட்டின் உபரியை அபகரித்துக் கொண்டது.

2) மூலவளத்தைச் சூறையாடியது.

3) தொழிற் துறையை அந்நிய மூலதனத்தோடும், அந்நிய தொழில் நுட்பத்தோடும் கட்டிப் போட்டது.

4) தொழிலாள விவசாய மக்களின் பொருளுற்பத்தி ஆற்றலைச் சீரழித்தது. ஒரே வார்த்தையில் சொன்னால், பெருவின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியைத் தடுத்தது.

இந்த நிலைமையைப் பேணிக்காப்பதற்கு மறைமுகமான அரசியல், பொருளாதாரத் தலையீடு என்ற வடிவத்திலிருந்து நேரடித் தலையீடு என்ற வடிவத்திற்கு அமெரிக்க ஏகாதிபத்தியம் மாறிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செங்கொடிகள் ஏந்தி பெருவின் எதிர்ப்பு ஊர்வலம்

## அமெரிக்காவின் அரசியல் தலையீடு:

பெருவின் தற்போதைய அரசுத் தலைவரான பிஜிமோரி இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் மக்களின் சுயவிருப்பத்துக்கு மாறாக ஆட்சிக் கவிழ்ப்பின் மூலம் அரசு கட்டிலேறியவர். பெருவிய மக்களின் விடுதலை யுத்தத்தை ஒடுக்க பல ஆயிரக் கணக்கான மக்களைப் படுகொலை செய்தவர். இவரது ஜெனரல், "ஒரு கொரில்லாவைக் கொல்வதற்காக பத்து விவசாயிகளைக் கொல்வது அவசியமானது" என்கிறார். பிஜிமோரி "உலகிலேயே மிக மோசமாக மனித உரிமையை மீறியவர்" என சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்தது. இவர் நடத்த முயன்ற "தேர்தலை" எதிர்க் கட்சிகளே கூட பகிஷ்கரித்தன. இத்தகைய ஒரு பாசிஸய ஆட்சியை அமெரிக்கா முண்டு கொடுத்துப் பாதுகாக்கிறது.

இந்த இராணுவ சர்வாதிகாரி பெரு மக்கள் மீது தொடுக்கும் அடக்குமுறைகளுக்கும் அட்டுழியங்களுக்கும் அமெரிக்கா இராணுவ உதவிகளை வழங்கி வருகின்றது. பெருவின் ஆயுதப் படைகளும், அரசியல் பொலிஸ் 'டின் கோட்'டும் சி.ஐ.ஏ.யால் நேரடியாக வழிநடத்தப்படுகின்றன. பெருவில் Valdimiro Montesinos என்பவர் இக்கைங்கரியத்தைப் பொறுப்பேற்று நடத்துவதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பொருளாதார ஆதிக்கம் பெரு நாட்டின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாகிவிட்டது. எனவே பெருவின் முன்னேற்றத்துக்குப் பொருந்தாத ஏகாதிபத்திய - பிஜிமோரி உறவுகளை ஒழித்துக்கட்டுவது பெரு மக்களின் விடுதலைக்கும், ஜனநாயகத்துக்கும் அவசியமாகிவிட்டது. அதற்கான பெரு மக்களின் முன் முயற்சியை அமெரிக்க ஏகாதிபத்தியம் கொடுங்கரம் கொண்டு ஒடுக்குகிறது.

தோழர் கொன்சாலோ பெருவின் தேசிய விடுதலைப் புரட்சியில் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையை நிறுவி மக்களின் முன்முயற்சியை அவிழ்த்து விட்டார். ஒடுக்கப்படும் மக்களின் விடுதலைக்கு வழிகாட்டும் தத்துவமாக விளங்கும் "மார்க்சிய லெனினிய மாவோயிஸத்தை" உயர்த்திப் பிடித்தார். பெருவின் குறிப்பான நிலைமைகளுக்குப் பொருத்தமான வடிவில் "கொன்சாலோ சிந்தனைகளாக" போராடும் மக்களின் கையில் கொடுத்தார். இதனைச் சாதிக்க திரிபுவாதத்துக்கும், நவீன திரிபுவாதத்துக்கும் எதிராகப் போராடினார். பெரு மக்களின் விடுதலைக்கும், ஜனநாயகத்துக்குமான அவாவை மக்கள் யுத்தமாக ஒன்றுகுவித்தார். இவரது வழிகாட்டலில் 'பெருவிய மக்கள் குடியரசை' நிறுவுவதை பெரு மக்கள் தமது தலையாய பணியாக எடுத்துக்கொண்டு விட்டனர்.

இப்பெருவியப் புரட்சியின் தலைவனைக் கைது செய்து படுகொலை செய்யப்போவதாக மிரட்டுகிறது பிஜிமோரி அரசு. இதைப் பாராட்டுகிறது அமெரிக்க அரசு. தோழர் கொன்சாலோவுக்கு சர்வதேச சட்ட விதிகளின்படி அரசியல் கைதிகளுக்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகள் மறுக்கப்படுகின்றது. அவரது வக்கீல் Dr.CRESPO ஜனவரி 11இல் 'டின் கோட்' ஆல் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவையெல்லாம் தமக்கு எத்தகைய ஆட்சிமுறை வேண்டும் என்பதையும், அதை எவ்வாறு நிர்மாணிப்பது என்பதையும் தீர்மானிப்பதற்கும் அமுலாக்குவதற்கும் பெரு மக்களுக்குரிய உரிமையை அமெரிக்கா அப்பட்டமாக மீறுவதையே காட்டுகிறது.

எனவே பெருவில் அமெரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்தியத்தின் பொருளாதார அரசியல் தலையீட்டின் சாரம்சமாக இருப்பது இவைதான்: பெருவுக்குள் பாய்ந்த அந்நிய மூலதனம் அந்நாட்டின் உற்பத்தி சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாகிவிட்டது. இதை நிலைநிறுத்த ஏகாதிபத்திய பிஜிமோரி கூட்டு முயல்கிறது. அதற்காக தமது கூட்டுச் சர்வாதிகாரத்தை மக்கள் மீது பிரயோகிக்கின்றது. பெருவின் இறையாண்மையை மீறி, சுயநிர்ணய உரிமையை மீறி தனது நவீன காலனியாதிக்கத்தை உறுதிப்படுத்த முயல்கிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். இத்தகைய அநீதியான குறிக்கோளுக்காக பெருமக்களின் விடுதலைக்கும் ஜனநாயகத்துக்கும் எதிராக எதிர்ப்புரட்சி வன்முறையை அமெரிக்க ஏகாதிபத்தியமும் பிஜிமோரி அரசும் பெரு மக்களின் மீது பிரயோகிக்கின்றனர்.

ஆனால் அந்நிய நிதி மூலதனச் சுரண்டல் அமெரிக்காவுக்கு பெருவின் 'உபரியை' மட்டும் கொடுக்கவில்லை. அபிமேல் குஸ்மானையும் கொடுத்தது. இந்த மனிதன் செய்த வேலையால் பெருமக்கள் தமது தேவை என்ன என்பதைப் புரிந்து கொண்டு விட்டனர். அமெரிக்க ஏகாதிபத்திய, பிஜிமோரி கூட்டுச் சர்வாதிகாரத்தை தூக்கி வீசி பெருவிய மக்கள் குடியரசை அமைக்கப் போராடுகின்றனர். இந்த நீதியான குறிக்கோளுக்காக புரட்சிகர வன்முறையை எதிரிகள் மீது பிரயோகிக்கின்றனர்.

அந்நிய மூலதனத்தின் கண்களுக்கு அபிமேல் குஸ்மான் "மிகப் பயங்கரமான" மனிதனாகத் தெரிவதன் காரணம் இதுதான்.

## முதலாளித்துவ நெருக்கடியும் பெருவியப் புரட்சியும்:

மிக முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் இன்று பெரும் பொருளாதார நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றன. 1990இல் ஏழு பெரும் முதலாளித்துவ நாடுகளின் மொத்த உற்பத்தியின் வளர்ச்சி 2.4% ஆக இருந்தது. ஆனால் இது 1991இல் 0.9% ஆக குறைந்து விட்டது. இந்தப் பின்னடைவுப் போக்கின் விளைவாக இந்நாடுகளில் வேலையின்மை அதிகரித்து வருகின்றது. முதலாளித்துவ உலகத்தின் தலைமை ஸ்தானத்தைப் பிடிப்பதற்குப் போட்டியிடும் ஜப்பானில் 1991ம் ஆண்டு ஒக்ரோபருக்கும் 1992ம் ஆண்டு ஜனவரிக்குமிடையில் 25 இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழந்தனர். 1991இல் பிரான்ஸ் மற்றும் பிரிட்டனில் வேலையில்லாதோர் 10% பேர் ஆவர். ஜேர்மனியில் 5%இனர் வேலையில்லாதோர் ஆவர். அமெரிக்காவில் வேலையில்லாதோர் 1991இல் 6.2%ஆக இருந்து 1992இல் 7.4%ஆக அதிகரித்துள்ளது. இப்பின்னடைவு உலக வர்த்தகத்தைப் பெருமளவு பாதித்துவிட்டது. 1980ம் ஆண்டு உலக ஏற்றுமதியின் வளர்ச்சி 6.5%ஆக இருந்தது. 1991இல் அது 1.1%ஆக குறைந்துவிட்டது.

அமெரிக்காவும் பிற ஏகாதிபத்திய நாடுகளும் ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீளமுடியவில்லை. ஆனால் அதைப் பயன்படுத்திக்கொண்டு ஒடுக்கப்பட்ட நாடுகளின் அரசுகள் எவ்வாறு ஆட்சி நடத்த வேண்டுமென்று ஆணையிடுகின்றன. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த நாடுகளில் பன்னாட்டுக்கம்பனிகள், உலக வங்கி, சர்வதேச நிதி நிறுவனம் மூலம் சுரண்டலைத் தீவிரப்படுத்த முயலுகின்றன. இந்நாடுகளின் மீது நவ காலனித்துவ ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் பொருட்டு அமெரிக்காவின் தலைமையில் அரசியல், பொருளாதார, பண்பாட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துகின்றன. ஏகாதிபத்தியவாதிகளின், குறிப்பாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆணைகளுக்கு ஏதாவது ஒரு ஒடுக்கப்பட்ட நாட்டின் அரசு பணிய மறுத்தால் ராணுவ நடவடிக்கையின் மூலம் அந்நாட்டின் மீது ஆதிக்கத்தை நிலைநிறுத்த முயலுகின்றனர்.

இத்தகைய ஆக்கிரமிப்புத் திட்டங்களுக்கு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையை ஒரு மூடுதிரையாக அமெரிக்கா பயன்படுத்தி வருகின்றது. ரசிய சமூக ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னால் ஐ.நா.பாதுகாப்புச் சபை ஐ.அமெரிக்க பாதுகாப்புச் சபையாக மாறிவிட்டது. இந்தப் பசுத் தோலைப் போர்த்துக் கொண்டு அமெரிக்க புலி ஈராக், பொஸ்னியா, சோமாலியா என தனது இராணுவ வேட்டையைத் தொடர்கிறது. லிபியாவின் மீது ஒரு இராணுவத் தாக்குதலுக்கு திட்டமிட்டிருக்கிறது.

இந்த ஆண்டில் "உதவி", நேரடி முதலீடு, திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் என்ற வகைகளில் ஆபிரிக்காவில் 17 பில்லியன் பவுண்களும், ஆசியாவில் 57 பில்லியன் பவுண்களும், மத்திய கிழக்கில் 23 பில்லியன் பவுண்களுமாக, மொத்தம் 127 பில்லியன் பவுண் அந்நிய மூலதனம் இப்பிராந்தியங்களுக்குள் பாய இருக்கிறது.

இந்த இரத்தம் குடிக்கும் பிசாசை ஒடுக்கப்படும் தேசங்களின் மக்கள் சகித்துக்கொள்ள மாட்டார்கள். இனி வரும் ஆண்டுகள் அமெரிக்காவின் நவீன காலனியாதிக்கத்துக்கெதிரான தேசிய விடுதலைப் புரட்சிகளால் விழாக் கோலம் கொள்ளும். இத்தேசிய விடுதலைப் புரட்சிகளுக்கு பெருவின் மக்கள் யுத்தம் ஒளிரும் பாதையாக விளங்கும்.

ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கும் தேசிய விடுதலைப் புரட்சிகளுக்கு மிடையில் இணக்கம் காண முயலுகிறவர்கள் இருதரப்பிலும் 'நியாய அநியாயங்களை, தேடிக்கொண்டேயிருப்பார்கள். இவர்கள் இரண்டு கதிரைகளுக்கு இடையில் இருக்க முடியாது.

எனவே முன்னேறிய முதலாளித்துவ நாடுகள் இன்று முகம் கொடுக்கிற பின்னடைவைக் கருத்தில் கொண்டு பார்த்தாலும் பெருவின் மக்கள் யுத்தம் "பயங்கரமானதுதான்". அவர்களுக்கு - ஏகாதிபத்திய உலகத்துக்கு - தோழர் கொன்சாலோ முதல் எதிரியும் மிகப் பயங்கரமான மனிதரும்தான்.

என்ன செய்வது? பெர்லின் சுவர் தகர்ந்து விட்ட பிறகும் - மேற்கு நாடுகளின் அர்த்தத்தில் கம்யூனிஸம் வீழ்ந்துவிட்ட பிறகும் - பெருவில் புரட்சி தொடர்கிறது; வளைகுடா யுத்தத்தின் வெற்றிப் புன்னகை மறையுமுன்னமே லொஸ் ஏஞ்சல்ஸ் பற்றி எரிகிறது; இலங்கையில் விதைத்ததை அறுக்கிறார்கள்; இந்தியாவில் விதைப்பதை விரைவிலேயே அறுப்பார்கள்.

ஆம்! ஒடுக்கப்படும் தேசங்களின் விடுதலைப் புரட்சிகள் பயங்கரமானவைதான். அவற்றைப் பற்றிப் பிடிப்போம்! பெருவின் மக்கள் யுத்தத்துக்கு ஆதரவளிப்போம்!! தோழர் கொன்சாலோவின் உயிரைப் பாதுகாக்கும் இயக்கத்தில் பங்கு கொண்டு அதற்கு வலுவூட்டுவோம்!!!

---

குறிப்பு: இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்ட பெருவின் பொருளாதார நிலைமை பற்றிய புள்ளி விபரங்களும் தகவல்களும் கீழ்க்காணும் நாலில் இருந்து எடுக்கப்பட்டவை.

THE DANCE OF THE MILLIONS (Latin America and the Debt Crisis). By Jackie Roddiek. First Published 1988. (c) Latin America Bureau (Research and Action) Ltd. 1 Amwell St. London EC 1R 1UL.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியத் தமிழர்களின் படுகொலைகள். தமிழீழ விடுதலைக்கு எதிரான ஜனநாயக மீறல்

சுபா

மூன்றாவது ஈழப்போர் ஆரம்பித்த இரண்டரை ஆண்டுகளில் இஸ்லாமியத் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவங்கள் பல நடந்தேறிவிட்டன. 1990 ஓகஸ்டில் காத்தான்குடி பள்ளிவாசலுக்குள் 140 பேரும் பின் ஏறாவூரில் 170 பேரும், இவ்வாண்டு ஏப்ரலில் குண்டு வெடிப்பு மூலம் அம்பாறையில் 25 பேரும், இவ்வாறே கடந்த மாதம் சாய்ந்த மருதுவில் 25 பேரும் கொல்லப்பட்டனர். அம்மாதமே அழிஞ்சபொத்தனையில் 50க்கும் மேற்பட்டவர்களும், கடந்த செப்டெம்பரில் பொலநறுவை மாவட்டத்திலுள்ள மகாவலி மேற்குக்கரைப் பிரதேசத்தில் அமைந்த நான்கு கிராமங்களைச் சேர்ந்த 160க்கும் மேற்பட்டவர்களும் கொல்லப்பட்டனர். ஆக மொத்தம் 500க்கும் மேற்பட்ட நிராயுதபாணியான மக்கள் தமது அன்றாடக் காரியங்களை ஆற்றுகிற வேளைகளில் கொலையுண்டு போயினர்.

இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்ததுபோல் யுத்தம் ஆரமபித்த நான்கு மாதங்களில், "விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக் கொடுப்பவர்கள்" என்ற குற்றச்சாட்டின் பேரில் யாழ்ப்பாணம், மன்னார்ப் பகுதிகளில் வாழ்ந்த இஸ்லாமியத் தமிழர்கள் அனைவருமே இருபத்திநான்கு மணிநேர அவகாசத்தில் ஆண்டாண்டுகாலமாக வாழ்ந்துவந்த சொந்த மண்ணில் இருந்து விடுதலைப்புலிகளால் விரட்டியடிக்கப்பட்டனர்.

விடுதலைப் புலிகளின் தளப்பிரதேசமான யாழ்-குடாநாட்டுக்குள்ளும் பகுதியளவான கட்டுப்பாடு நிலைநாட்டப்பட்டுள்ள கிழக்கு மாகாணம் மற்றும் மன்னார்ப் பகுதியிலும், கெரில்லாத் தாக்குதலில் ஈடுபட்டு வருகிற எல்லைப் புறங்களிலும் இவை நடந்திருக்கின்றன. சம்பவத்துக்குச் சம்பவம் அரசு புலிகள் மேலும், புலிகள் அரசு மேலும் "பழிபோட்டு" அறிக்கைகள் விடுகின்றன. அரசும் அதன் அடிவருடிக் குழுக்களும் இப் படுகொலைகளில் சிலவற்றை நடத்தியுள்ளன என்பதற்கான ஆதாரங்களைக் கொழும்பில் இருந்து வெளிவரும் 'சரிநிகர்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. அதே ஆதாரங்கள் வேறு சம்பவங்களில் விடுதலைப் புலிகளின் சம்பந்தத்தையும் சுட்டிக் காட்டியுள்ளன.

தமிழீழத்தில் வாழ்ந்த இஸ்லாமியத் தமிழர்களை, என்று வலுக்கட்டாயமாகத் துரத்தியடித்தார்களோ அன்றே இந்தக் குற்றச்சாட்டுக்களை மறுக்கும் தகுதியை விடுதலைப் புலிகள் இழந்து விட்டனர். இந்தப் பின்னணியில் சர்வதேசத் தொடர்புசாதனங்கள் தருகிற தகவல்களையும் வைத்துப் பார்த்தால் இச்சம்பவங்களில் பல விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டவை எனக் கருத நியாயமுண்டு.

இத் தொடர்நிகழ்வுகள் உதிரிஉதிரியான சம்பவங்களாகக் கருதப்படக்கூடியவை அல்ல. இஸ்லாமியத் தமிழர்கள் தொடர்பான விடுதலைப் புலிகளின் கண்ணோட்டம், அரசியல் நிலைப்பாடு இவற்றால் தீர்மானிக்கப்படும் அணுகுமுறையில் இருந்துவரும் ஒரு அரசியல் போக்காக மாறிவிட்டது. இது 'தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் இஸ்லாமியத் தமிழர்களை கட்டாயப்படுத்தி இணைக்கும் முயற்சி தோல்வியடைந்ததன் எதிர் விளைவாக அத் தேசத்திலிருந்து அவர்களைக் கட்டாயமாக வெளியேற்றி விடுவது' என்பதாக இருக்கிறது.

இது தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இஸ்லாமியத் தமிழர்களை ஒன்றிணைப்பது எவ்வாறு, விடுதலைப் புலிகளின் கட்டாய இணைப்புக்கொள்கை ஜனநாயக ரீதியானதா, இல்லையெனில் ஜனநாயகத் தீர்வு என்ன, என்ற பிரச்சனையை முன்னிறுத்துகிறது.

மேலும் இப்பிரச்சனையில் மட்டுமல்ல, பொதுவாகவே விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோத, எதேச்சாதிகாரப் போக்கைக் காரணம் காட்டி தமிழீழ விடுதலையை நிராகரிக்கிற ஒரு போக்கும் உள்ளது. எனவே தமிழீழம் ஏன் தவிர்க்க இயலாதது, தமிழீழ விடுதலை எவ்வாறு இஸ்லாமியத் தமிழர்களுக்கு ஒரு ஜனநாயகத் தீர்வாக அமையமுடியும், என்ற முறையில் இப் பிரச்சனையைப் பார்க்க வேண்டியுள்ளது.

இலங்கையின் மைய அரசானது ஏகாதிபத்தியவாதிகளின் பொருளாதாரச் சுரண்டலுக்கும், அரசியல் ஆதிக்கத்துக்கும் சேவகம் செய்யும் சிங்கள விதேசிய ஆளும் வர்க்கத்தின் அரசாக உள்ளது. இந்த அரசானது தமிழ் சிங்கள தேசங்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், தேசிய சுதந்திரத்துக்கும் ஒரு விலங்காக மாறிவிட்டது. எனவே இதனைத் தகர்க்க தமிழ் சிங்கள தேசமக்கள் கிளர்ந்தெழுவது வரலாற்று நியதியாகும். இவ் அபாயத்திலிருந்து தமது அரசைப் பாதுகாத்துக்கொள்ள இவ்விரு தேசங்களையும் ஒன்றுடன் ஒன்று மோத விடுவது என்ற கொள்கையை சிங்கள ஆளும் வர்க்கம் கடைப்பிடித்து வருகின்றது. இலங்கை மக்களுக்கு இருக்கும் பற்றாக்குறையான வாய்ப்புக்களில் தமிழ் பேசும் மக்களுடையவற்றைப் பறித்து சிங்கள மக்களுக்கு (சலுகை) அளிப்பதன் மூலம் இம்மக்களுக்கிடையில் முடிவற்ற பூசல்களுக்கும் மோதல்களுக்கும் சிங்களப் பேரினவாதிகளும் அவர்களது அரசும் வழிவகுத்துள்ளனர். மீளமுடியாத அரசியல், பொருளாதார நெருக்கடிகளில் சிக்கித் தவிக்கும் தங்களது அரசைப் பாதுகாத்துக் கொள்ளவும் அதன் மூலம் இலங்கை மக்களின் அரசியல் பொருளாதார வாழ்வின்மீது ஆதிக்கம் செலுத்தும் ஏகாதிபத்தியங்களுக்கு தொண்டு செய்யவுமே சிங்களப் பேரினவாதிகள் இவ்வாறு செய்கின்றனர்.

இலங்கையில் 'இடதுசாரிகள்' எனச் சொல்லப்படுகின்ற எப்பிரிவினரும் இப் போக்கைப் புரிந்து கொள்ளவில்லை. சிங்கள ஆளும் வர்க்கங்கள் ஜனநாயக விரோத அரசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை கட்டியமைத்து நிலைநிறுத்த இன ஒடுக்குமுறை என்ற யுத்த தந்திரப் பாதையைப் பின்பற்றி வருவதையும், இதை முறியடிக்க இன சமத்துவம் - தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை - என்ற யுத்த தந்திரப் பாதையைப் புரட்சியாளர்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்பதை (இன்று வரையிலுங்கூட) இவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. இதன் விளைவாகவே சிங்களத் தொழிலாளர்கள் ஆளும் வர்க்கக் கட்சிக்குப் பின்னால் சென்று பேரினவாதத்திற்கு இரையானார்கள்; தமிழ் பேசும் மக்கள் மீதான ஒடுக்குமுறைக்குத் துணை போனார்கள். பிற இனங்களை ஒடுக்கும் எந்த ஒரு தேசிய இனமும் சுதந்திரமானதாக இருக்க முடியாது என்ற உண்மைக்கு இன்று சிங்கள மக்கள் நிரூபணமாக உள்ளனர்.

இன்றைய இலங்கை அரசு இனஒடுக்குமுறையிலிருந்து பிரிக்கமுடியாதவாறு கட்டுண்டு கிடக்கிறது. தமிழ்பேசும் மக்கள்மீது நடத்தப்படும் ஒடுக்குமுறையையே தனது வாழ்வின் ஆதாரமாகக் கொண்டுள்ளது.. ஆகையால் இன்றுள்ள இலங்கை அரசு அமைப்பிற்குள் இனமோதல்கள் தவிர்க்க இயலாதவை. இதன் விளைவாக இரு இனங்களைச் சேர்ந்த ஒடுக்கப்பட்ட மக்களும் வர்க்கங்களும் ஒன்றுசேர்ந்து வர்க்கப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் தற்போது இல்லை. இந் நிலைமைகளின் காரணமாக இலங்கையின் அரைக்காலனிய அரசின் வீழ்ச்சிக்கும் சிங்கள மக்களின் விடுதலைக்கும்கூட தமிழினம் சுயநிர்ணய உரிமையைப் பெறுவது ஒரு முன்நிபந்தனை ஆகிறது.

இலங்கையில் இருந்து ஈழத் தமிழினம் ஜனநாயக முறையில் பிரிந்து போவதற்கான வழிமுறையை (வாக்கெடுப்பை) இலங்கைப் பேரினவாத அரசு ஏற்கத் தயாராக இல்லை. அரசியல் வழியில் தீர்வுகாணத் தயாராக இல்லை. அதற்கு மாறாக ஒரு உள்நாட்டு யுத்தத்தின் மூலமாக ஈழத் தமிழினத்தின் பிரிந்து போகும் உரிமையை மறுத்து அவ்வுரிமைக்கான இயக்கத்தை நசுக்க முயல்கிறது.

ஆகையால் ஈழத்தமிழினம் தனது பிரிந்துபோகும் உரிமையை ஒரு உள்நாட்டு யுத்தத்தின் மூலமாக அடைவது தவிர்க்கமுடியாததாகின்றது. இதனால் இன்று நடைபெறும் யுத்தத்தின் நோக்கம் ஈழத் தமிழினம் அரசியல் சுதந்திரம் பெறும் பொருட்டு தனிநாடு அமைத்துக் கொள்வதாக இருக்கிறது.

## தமிழீழ விடுதலைப் போராட்டமும் இஸ்லாமியத் தமிழரும்:

இஸ்லாமியத் தமிழர் எனப்படுவோர் தமிழ்த் தேசிய இனத்தின் சிறுபான்மை மதப்பிரிவினர் ஆவர். இவர்கள் பெரும்பாலும் வியாபாரத்தையே தமது தொழிலாகக் கொண்டுள்ளனர். இதன் காரணமாகவும் நாடு முழுவதும் பரந்து வாழ்கின்றனர். எனினும் ஒரு நிலையான மக்கட்சமுதாயமாக (33% மக்கள்) செறிந்து வாழும் பகுதி கிழக்கு மாகாணம் ஆகும்.

இலங்கையின் சிங்களப் பேரினவாத அரசின் கீழ் இஸ்லாமியத் தமிழர்கள் தமது மத உரிமை உள்ளிட்ட அனைத்து ஜனநாயக உரிமைகளையும் இழந்து வாழ்கின்றனர். வியாபாரம் மற்றும் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட இவர்களின் பொருளியல் வாழ்வு சிங்களப் பேரினவாதத்தால் சிதைக்கப் பட்டுள்ளது. மொழியுரிமை மறுக்கப்பட்டுள்ளது. எனவே சிங்களப் பேரினவாத அரசியலின்கீழ் இவர்கள் தமது ஜனநாயக உரிமைகளை அடைவது சாத்தியமானது அல்ல. இவை ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசின்கீழ் மட்டுமே அடையப்படக் கூடியவையாகும்.

இவர்கள் நிலையான மக்கட் சமுதாயமாக வாழும் பிரதேசம் தமிழீழத்துக்குள் அடங்குவதாலும், தமிழீழ விடுதலைப் போராட்டமானது சிங்களப் பேரினவாத அரசுமுறைக்கு முடிவுகட்டுவதாக அமைவதாலும் தமிழீழ விடுதலையிலேயே இஸ்லாமியத் தமிழர்கள் தமது விடுதலையைக் காணமுடியும். அதாவது தமிழீழ விடுதலையின் மூலம் ஒரு மக்கள் ஜனநாயகக் குடியரசை நிறுவினால் மட்டுமே இஸ்லாமியத் தமிழர்களின் ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்க முடியும். ஏனெனில் அத்தகைய ஜனநாயக அரசின் கீழ்த்தான் இன சமத்துவத்தை நிலைநாட்ட முடியும். தமிழ்த்தேசிய இனத்திலிருந்து வேறுபட்ட இஸ்லாமியத் தமிழர்களுக்கு உரியதான பிரத்தியேக நலன்களை உத்தரவாதம் செய்யமுடியும். எனினும் இதனைச் சாதிப்பதற்கு மக்கள் தரப்பில் பின்வரும் தடைகளைக் கடந்தாக வேண்டியுள்ளது. அவையாவன:

1. தமிழ் மக்களிடையேயுள்ள குறுகிய தேசியவாதக் கண்ணோட்டம்.
2. முஸ்லிம் மக்களிடையேயுள்ள குறுகிய மதவாதக் கண்ணோட்டம்.
3. விடுதலைப் புலிகளின் கட்டாய இணைப்புக்கொள்கை.

## குறுந்தேசிய வாதம்:

'தமிழீழம்' என்ற முழக்கமானது ஏகாதிபத்திய அரசியல் பொருளாதார ஆதிக்கத்திலிருந்தும் சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறையில் இருந்தும் தமிழ்த்தேசிய இனத்தை விடுவிப்பதாக இருப்பதனால் அது தேசிய விடுதலை முழக்கமாகின்றது. விடுதலையடைந்த தேசம் விடுதலையின் நலன்களைப் பாதுகாக்கின்ற அனைத்து வர்க்கங்களும் அரசியல் அதிகாரத்தில் பங்கேற்கின்ற ஜனநாயகக் குடியரசை நிறுவ வேண்டியிருப்பதால் அது ஜனநாயக முழக்கமாகின்றது. எனவே 'தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு' என்பது இன்றைய வரலாற்றுக் கட்டத்தின் தேவைகளான விடுதலையையும் ஜனநாயகத்தையும் முரண்பாடற்ற முறையில் பிரதிபலிக்கும் முழக்கமாகும்.

கடந்தகாலத்தில் 'இடதுசாரிகள்' எனத் தம்மைக் கூறிக்கொண்டோர் தமிழ்த்தேசிய இனப்பிரச்சனையின் இப் புரட்சிகர உள்ளடக்கத்தைப் புரிந்துகொள்ளத் தவறினர். இதன் விளைவாக இலங்கையின் ஜனநாயகப் புரட்சிக்கான இயக்கம் புர்ட்சிகரத் தலைமையை இழந்தது. இரு தேசத்து மக்கள்மீதும் சிங்கள-தமிழ் ஆளும் குமபலின் தலைமை நிறுவப்பட்டது. தொண்டமான் மலையகத் தொழிலாளி வர்க்கத்தின் பெருந்தலைவர் ஆனார்.

சமஷ்டிக்கட்சி (இதற்கு தமிழரசுக்கட்சி என்று ஒரு தமிழ்ப்பெயரும் உண்டு. எந்தக்காலத்திலும் இந்தக் கட்சி தமிழர்களுக்கு சுதந்திர அரசமைக்கும் உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்டென்பதையோ, அரசமைப்பதையோ ஆதரிக்கவில்லையென்பதால் அப்பெயரைப் பாவிப்பதைத் தவிர்க்கிறேன்.) சிங்களப் பேரினவாதத்தை எதிர்ப்பதாகக் கூறிக்கொண்டு தமிழ் மக்களிடையே குறுமினவாதத்தை வளர்த்தது. தேசிய இனங்கள் சமத்துவமானவை, சுயநிர்ணய உரிமை உடையவை என்ற ஜனநாயக நிலை நின்று தமிழீழத்தின் சுய நிர்ணய உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லாமல் பிரதேச சுயாட்சிக் கோரிக்கையுடன் கட்டுப்படுத்தியது. மலையக மக்களின் குடியுரிமை, இஸ்லாமியத் தமிழர்களின் மதவுரிமை உள்ளிட்ட தமிழ்பேசும் மக்கள் அனைவரினதும் ஜனநாயக உரிமைக்கான ஓர் ஒன்றுபட்ட இயக்கத்தைக் கட்டியமைப்பதில் அக்கறை காட்டவில்லை. மலையகத் தமிழரை 'தோட்டக்காட்டார்' என்றும், இஸ்லாமியத் தமிழர்களைத் 'தொப்பிபிரட்டிகள்' என்றும் குறுகிய இனவாதம் பேசி தமிழ்பேசும் மக்களைக் கூறுபடுத்தினர். சிங்கள தமிழ் தேசிய இனங்களைச் சேர்ந்த ஜனநாயக சக்திகள் ஒன்றுபடுவதற்கும் தொழிலாளி வர்க்க இயக்கம் வளர்வதற்கும் தடையாக இருந்தனர். ஒரு சில ஆண்டுகள் அல்ல, சுமார் 30 ஆண்டுகளுக்கும் மேலாக இச்சிந்தனைப் போக்கை தமிழ் மக்களிடையே பரப்ப இவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இதன் விளைவாக தமிழ்மக்கள் தமது தேசியப் பிரச்சனையை ஆளும் வர்க்கத்தினர் கொடுத்த குறுமினவாத உள்ளடக்கத்தில் புரிந்து கொள்வது தவிர்க்க இயலாததாயிற்று.

1970ம் ஆண்டிற்குப் பிறகு சிங்களப் பேரினவாதிகளும் அவர்களுடைய அரசும் தமிழ்பேசும் மக்களின்மீது ஒடுக்குமுறையை அதிகரித்தது. அரசின் இந்த நடவடிக்கை தமிழ்பேசும் மக்களைக் கொதிப்படையச் செய்தது. இலங்கையில் நிலவுகின்ற அரசமைப்புக்குள் சிங்கள இனத்தவரும் தமிழ்பேசும் மக்களும் சேர்ந்து வாழ்வது சகித்துக் கொள்ளமுடியாது என தமிழ் இளைஞர்கள் உணர்ந்தனர். இதன் விளைவாக தனிநாடு முழக்கத்தை முன்வைத்தனர். இந்நிலையில் சரிந்துவரும் தங்களின் செல்வாக்கை நிலைநிறுத்திக் கொள்ள தமிழ் ஆளும்வர்க்கப் பிரிவுகளும் தொண்டமானும் கூட்டணி சேர்ந்தனர். வட்டுக்கோட்டையில் 'தமிழீழத் தீர்மானம்' நிறைவேற்றப்பட்டது.

1977ம் ஆண்டு தேர்தலை 'தமிழீழத்துக்கான சர்வஜன வாக்கெடுப்பு' என அறிவித்தனர். அப்போதே தொண்டமான் தனிநாட்டுக் கோரிக்கையைக் கைவிட்டார். கூட்டணியின் மிச்சஅணி தேர்தலில் வெற்றிபெற்று அதிகாரத்தில் அமர்ந்து சில ஆண்டுகளில் தனது தமிழீழ வேடத்தைக் கலைத்துவிட்டு மாவட்ட அபிவிருத்திச்சபை என்ற சொந்தக் கோரிக்கைக்குத் திரும்பியது. 83' ஜுலையில் நடந்த இனப்படுகொலைத் தாக்குதலின்பின் இந்திய விஸ்தரிப்புவாத அரசினதும் ஆளும் கும்பலினதும் தயவில் ஆட்சியில் அமர படாதுபாடு பட்டனர். இத்துரோகங்களினால் மக்கள் மத்தியில் தனிமைப்பட்டு 'தமிழ்மக்களின் தலைவர்கள்' என்ற பாத்திரத்தை இழந்தனர்.

இவர்களின் தொடர்ச்சியான துரோகங்களை அம்பலப்படுத்த இளைஞர் அமைப்புக்கள் முயன்றன. எனினும் அவை சமஷ்டிக்கட்சி தமிழ்த் தேசிய இனப்பிரச்சனைக்குக் கொடுத்த குறுமினவாத உள்ளடக்கத்தை - தமிழீழத்தின் சுயநிர்ணய உரிமை என்ற ஜனநாயக முழக்கத்தால்

## காயீன்கள்

கிழக்கைச் சிவக்க வைத்தோம்
இருளின் ஆள்கையில்
இரத்தத்தால்.

ஓ... பிதாவே!
பிதாவுக்கும் பிதாவே!
இரட்சணியத்தின் உறைவிடமே!
ஐம்பத்து மூன்று மணிகளை உருட்டி
உமது
ஜெபவேளை முடியுமுன்பே
பள்ளியிலிருந்த ஆபேல்களின்
தொழுகைக் குரல்கள்
பரலோகம் நோக்கி
உமது செவிகளை
கூக்குரல்களாய் எட்டிடச் செய்தோம்.

என் பிதாவே!
ஆபேலின் குடும்பத்தினரையும்
முலை சூப்பிய பச்சைக் குழந்தை உட்பட
உமது திருப்பாதங்களில்
பலியிட்டோம்.

குல்லாத் தலைகள் சீவி
மொட்டை பறிந்த வாட்களை
அடுத்த வேட்டையின்
கட்டளை பிறக்குமுன்
தீட்டித் தருக ஆண்டவரே, ஆள்பவரே.

துப்பாக்கிப் பீரங்கிகளாலும்,
கத்தி, வாள், பொல்லு, தீயாலும்
மானுடத்தைச் சாகடித்தல்
சலித்துப் போயிற்று.

மானுடத்தின்
முகத்தைப் பிராண்டி
குரல்வளையின் முடிச்சைக்
கடித்துத் தின்று
வயிற்றைப்
பற்களால் கிழித்துக் குடலெடுத்து
ஈரலையும் உண்பதற்கு
பிதாவே உமது
அனுமதி வேண்டுகிறோம்.
அதுவும் இப்பொழுதே.

இருட்டில் சிவந்து கிடக்கும்
கிழக்கிலேயே
ஆரம்பித்துவிட அனுமதி வேண்டும்.

அமீன், அக்பர்,
நௌபியா, ஷெரினாவிலிருந்தே
தொடங்கி விடுகிறோம்.

சலித்துப் போயிற்று ஆண்டவரே
சலித்துப் போயிற்று.
மானுடத்தை
ஆயுதங்களால் சாகடித்தல்
சலித்தே போயிற்று.
கட்டளையிடுங்கள் தந்தையே
காத்திருக்கிறோம் பணிமுடிக்க.

தமயந்தி

நன்றி: தூண்டில்-55



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றியமைக்கவில்லை. இவ் இயக்கங்களின் முதலாளிய, சிறு முதலாளிய வர்க்கத்தன்மை காரணமாக, தமிழ்த் தேசிய இனப்பிரச்சனையை முரணற்ற ஜனநாயகக் கண்ணோட்டத்தில் புரிந்துகொள்ள இயலவில்லை. 'தமிழ்த் தலைமைகளின்' சமரச சரணடைவுப் போக்கிற்கான வர்க்க அடிப்படையையும் இவர்கள் உணரவில்லை.

இந்த ஜனநாயக அரசியல் பணி இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. இது தமிழீழம் என்ற விடுதலை முழக்கத்தின் கீழ் தமிழ் மக்களையும், இஸ்லாமியத் தமிழர்களையும், மலையக மக்களையும் ஒன்று திரட்டி ஒரு ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கத்தைக் கட்டியமைப்பதற்குத் தடையாகவுள்ளது. அது மட்டுமன்றி இன்றைய ஏகாதிபத்திய சகாப்தத்தில் ஒடுக்கப்படும் தேசமாக உள்ள தமிழீழ மக்கள் உலகெங்கும் ஒடுக்கப்படும் பிற தேசங்களுடன் தம்மை ஐக்கியப்படுத்திக் கொள்ளவும் இக் கண்ணோட்டம் தடையாக உள்ளது.

## குறுகிய மதவாதம்

இஸ்லாமியத் தமிழர்களிடையே மொழி இனப்பற்றைக் காட்டிலும் மதப்பற்று மேலோங்கி நிற்கிறது. இதனால் தமது சமூகக் கட்டுக்கோப்பை இனரீதியில் அன்றி மதரீதியில் வெளிப்படுத்த விழைகின்றனர். இது 'அகண்ட இஸ்லாமிய வாத'த்துக்கும் இட்டுச் செல்கிறது. அதாவது உலகிலுள்ள இஸ்லாமிய மதத்தைப் பின்பற்றுகின்ற மக்கள் அனைவரையும் ஒரே சமூகமாகப் பார்க்கிறது. உண்மை இவ்வாறில்லை. அவை பல தேசிய இனங்களாக, இனக்குழுக்களாக பல்வேறு அரசுகளின் கீழ் வாழ்கின்றன. மேலும் இவை ஒடுக்குவோரும் ஒடுக்கப்படுவோரும் எனப் பிளவுண்டே இருக்கின்றன. அகண்ட இஸ்லாமிய வாதம் வெறும் கருத்துப்புனைவு. - மத நம்பிக்கையின்பாற்பட்ட தப்பபிப்பிராயம் என்பதற்கு வளைகுடா யுத்தம் சமகாலத்தில் மிகச்சிறந்த எடுத்துக்காட்டாகும். மதஉணர்வு, இனஉணர்வுக்கும் பின் தங்கியது. மதச் சமூகங்களைக் காட்டிலும் இனச்சமூகங்கள் வரலாற்று ரீதியில் முன்னேறியவை. பரந்த இனச்சமூக வளர்ச்சியைப் புறக்கணித்து, குறுகிய மதச்சமூகக் கட்டுக்கோப்பை நிலைநிறுத்த முயல்வது வரலாற்று வழியில் பிற்போக்கானது. இது ஜனநாயக உணர்வாகாது. இப் பின்தங்கிய ஜனநாயகமற்ற உணர்வு அச் சமூகத்தின் வளர்ச்சிக்கு எவ்வழியிலும் உதவவில்லை. இஸ்லாமியத் தமிழர்களிடையேயுள்ள உயர் குடியினர் தமது வணிக நலன்களை அடைவதற்கு இம் மக்களைப் பகடைக் காய்களாகப் பயன்படுத்த மட்டுமே உதவியுள்ளது. இவர்கள் தமது ஆதாயங்களுக்காக சிங்கள ஆளும் வர்க்கங்களை அண்டிப்பிழைத்து வாழும் கூட்டமாக தாம் இருப்பதுபோல் இஸ்லாமியத் தமிழர்களையும் இருத்திவைக்க விரும்புகின்றனர். இதற்காகவே மதவாத, தமிழின விரோத உணர்வுகளைத் தூண்டி விடுகின்றனர். இதன்மூலம் ஜனநாயக இயக்கத்தில் இஸ்லாமியத் தமிழர்கள் ஒன்றுபடுவதைத் தடுக்கின்றனர்.

மேலும் மத நம்பிக்கைச் சுதந்திரம் ஒரு ஜனநாயக உரிமை. அதைப் பாதுகாப்பது ஜனநாயகவாதிகளின் கடமையாகும். ஆனால் மதம் மக்களின் தனிப்பட்ட விவகாரம். அரசுமுறையில் இருந்தும், கல்விமுறையில் இருந்தும் மதத்தை வேறு பிரிப்பது அரசின் ஜனநாயகத் தன்மையைக் காக்கவும், ஜனநாயக சமூகத்தை உருவாக்கவும் அவசியமானவை.

இந்நிலையினின்று இஸ்லாமியத் தமிழர்களிடையேயுள்ள குறுகிய மதவாதச் சிந்தனைப் போக்கை மாற்றியமைக்கப் போராடுவது ஜனநாயகவாதிகளின் கடமையாகும். இதற்குப்பதில் ஜனநாயக வரலாற்றுக் கட்டத்தின் தேவைகளோடு இசைந்திராத மக்களின் பின்தங்கிய உணர்வுகளோடு சமரசம் செய்துகொள்கிற, மக்களுக்கு வால்பிடிக்கின்ற போக்கு வரலாற்றை முன்கொண்டு செல்ல ஒருபோதும் உதவாது.

## விடுதலைப் புலிகளின் கண்ணோட்டம்.

விடுதலைப் புலிகளின் தேசிய இனப்பிரச்சனை குறித்த முதலாளித்துவப் புரிதல் இஸ்லாமிய தமிழர்கள் தொடர்பான நிலைப்பாட்டைத் தீர்மானித்திருக்கிறது. பாட்டாளி வர்க்கம் தேசிய இனப் பிரச்சனையை ஜனநாயகப் புரட்சியின் பகுதியாகக் காண்கிறது. தமிழ்த் தேசியஇனம் சிங்களப் பேரினவாத அரசியலிலிருந்து பிரிந்து தனியரசை அமைப்பதானது இலங்கை மக்கள் அனைவரதும் விடுதலைக்கும் ஜனநாயகத்துக்கும் முந்நிபந்தனையாக இருப்பதாலேயே ஜனநாயகவாதிகள் இக்கோரிக்கையை ஆதரிக்கின்றனர். வேறுவிதமாகச் சொன்னால் ஒடுக்கும் தேசிய இனத்தினதும் ஒடுக்கப்படும் தேசிய இனத்தினதும் தொழிலாளி வர்க்கத்தினது ஐக்கியத்திற்கும் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிக்கும் குந்தகம் இல்லாத வகையிலேயே ஒடுக்கப்படும் தேசத்தின் விடுதலைக்கான கோரிக்கையைப் பாட்டாளி வர்க்கம் முன்நிறுத்துகிறது. சிங்கள தேசத்தின் தொழிலாளி வர்க்கம் சிங்களப் பேரினவாதத்திற்குப் பலியாகி தமிழ்த்தேசிய இனத்தின் மீதான ஒடுக்குமுறைக்குத் துணைபோகின்றது. சிங்கள ஆளும் வர்க்கம் தனக்கு மாட்டிய சுருக்குக்கயிற்றை தானே இறுக்கிக் கொள்கிறது. இதனால் இரு தேசிய இனத்து ஒடுக்கப்பட்ட மக்களும் வர்க்கங்களும் ஒன்று சேர்ந்து வர்க்கப் போராட்டங்களில் ஈடுபடுவதற்கான வாய்ப்புக்கள் இல்லாது போய்விட்டது. எனவே வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிக்கும் சிங்களப் பேரினவாதத்தின் பிடியில் இருந்து ஒடுக்கப்படும் சிங்கள மக்களை விடுவிப்பதற்கும் தமிழினம் பிரிந்து செல்வது அவசியமாகிறது. இலங்கையின் இக் குறிப்பான நிலைமை காரணமாகவே ஈழத் தமிழர்களின் பிரிவினைப் போராட்டத்தை ஜனநாயகவாதிகள் ஆதரிக்கின்றனர்.

இதனாலேயே சிங்கள தேசிய இனத்தைச் சேர்ந்த பாட்டாளி மக்களும், ஜனநாயக சக்திகளும் இரு இனங்களுக்கிடையிலான பூசல்களுக்கும் மோதல்களுக்கும் முடிவுகட்டி, தமிழ் பேசும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமையை வழங்கும் திட்டத்துடன், இலங்கையின் மக்கள் ஜனநாயகப் புரட்சியை நிறைவேற்றுவதற்கான ஒரு திட்டத்தை முன்வைத்து, அதை நிறைவேற்றும் சிந்தையுடனும் நேர்மையுடனும் போராட முன்வருவார்களானால் இலங்கை வாழ் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்திற்கான தந்திரத்திலும் மாற்றம் ஏற்படலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நிபந்தனையோடு தமிழீழ விடுதலை முழக்கத்தை முன்வைக்கின்றார்கள்.

மேலும் தமிழர்கள் தமிழ் ஈழ தனிநாடு காண்பது மட்டுமல்ல, அதன்மூலம் இன சமத்துவத்தை நிலைநாட்டி ஜனநாயகப்புரட்சியை வெளியீட்டச் செய்வதுடன் அதிலிருந்து சோஷலிஸப் பூரட்சியூடாக கம்யூனிஸ சமூக அமைப்பை நோக்கி சமூக வளர்ச்சியை முன்கொண்டு செல்லவேண்டும் என்றும் பாட்டாளி வர்க்கத்தின் நலன்கள் கோருகின்றன.

விடுதலைப் புலிகளின் முதலாளித்துவக் கண்ணோட்டமானது, சொந்தத் தேசிய இனத்தின் உரிமைகளைப் பற்றி மட்டுமே கவலைப்படுகிறது. அனைத்து இனங்களின் சமத்துவத்துக்காகப் போராடுவது முதலாளி வர்க்கத்தின் நோக்கமல்ல. எனவே அது தமிழ்த்தேசிய இனத்திலிருந்து வேறுபட்டதான மலையகத் தமிழரதும், இஸ்லாமியத் தமிழரதும் நலன்கள் குறித்து கவலைப்படப் போவதில்லை. அனைத்து இனங்களது சமத்துவத்துக்கும் ஜனநாயகத்துக்குமான குறிக்கோள்களுக்கு மேலானதாக தன் சொந்தத் தேசிய இனத்தின் குறிக்கோள்களைக் கருதுகிறது. இதற்குப் பணிந்து வருமாறு பிறரைப் பணிக்கிறது.

இது மட்டுமல்ல, தமிழீழத்தில் விடுதலைப் புலிகள் அமைக்க விரும்புகின்ற அரசியல் அடிப்படை, 'ஒரு படையின் சர்வாதிகாரம்' என்ற பாசிசக் கொள்கையாக இருக்கிறது. இது இஸ்லாமியத் தமிழர்களில் ஒடுக்கப்படும் மக்களுக்கு அரசியல் அதிகாரத்தில் பங்களிப்பதையோ, அவர்கள் வாழும் பிரதேசம் அமைய இருக்கும் தமிழீழ நாட்டிற்குள் ஒரு சுயாட்சி பெற்ற மாநிலமாக அமைவதையோ மறுக்கிறது. இதன் விளைவு கட்டாய இணைப்பு அல்லது கட்டாய வெளியேற்றம் என்பதில் போய் முடிகின்றது.

விடுதலைப் புலிகள் கடைப்பிடிக்கும் இந்த அரசியல் மார்க்கம் தமிழீழ விடுதலையை வென்றெடுக்க அவர்கள் கடைப்பிடிக்கும் நீண்டகால யுத்தம் என்ற இராணுவ மார்க்கத்துடன் முரண்படுகிறது. இதன் விளைவாக விடுதலை யுத்தத்தின் முன்னேற்றம் தாமதப் படுகின்றது.

இஸ்லாமியத் தமிழர்களை தமிழீழத்திலிருந்து விரட்டியடித்தும் அவர்களைப் படுகொலை செய்தும் 8 இலட்சம் மக்களின் எதிர்ப்பைச் சம்பாதித்தனர். இதனைப் பிரேமதாஸ அரசும், அஷ்ரப் (முஸ்லிம் கொங்கிரஸ்) போன்ற யூ.என்.பி. அடிவருடிகளும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கும் தமது அரசியல், இராணுவத் தந்திரங்களை நிறைவேற்றப் பயன்படுத்திக் கொண்டன.

அரசியல் ரீதியாக வடக்குக் கிழக்கைத் துண்டாட முஸ்லிம் மக்களின் ஆதரவைத் திரட்டுகின்றனர். இராணுவ ரீதியாக, விடுதலைப் புலிகள் குறித்து இஸ்லாமியத் தமிழர்களிடம் வளரும் அச்ச உணர்வைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தில் படை நடவடிக்கைகளைப் பலப்படுத்த முடிகிறது. 20% படைபலத்தை இழந்துவிட்ட நிலையிலும் சிங்கள மக்கள் அரசபடையில் சேரத் தயங்கும் நிலையிலும் 'முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு' என்ற போர்வையில் அவர்கள் மத்தியிலிருந்து அரச படைகளுக்கு ஆட்சேர்க்க முயல்கிறது. இப்படை இஸ்லாமியத் தமிழர்களைப் பாதுகாப்பதற்கல்ல தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கவே ஏவப்படும் என்பது வெளிப்படை.

ஒரு புறம் தமிழர் தாயகத்தைக் காக்கப் போராடுவதும் மறுபுறம் அத்தாயகத்தை துண்டாட எதிரிக்கு வாய்ப்பளிப்பதும், ஒருபுறம் விடுதலை யுத்தத்தில் ஊன்றிநின்று எதிரியின் படைபலத்தை அழிக்க அளப்பரிய தியாகங்கள் செய்வதும் மறுபுறம் படைபலத்தைப் பெருக்க வாய்ப்பளிப்பதும் விடுதலைப் புலிகளின் அரசியல் மார்க்கத்துக்கும் இராணுவ மார்க்கத்துக்கும் உள்ள முரண்பாட்டின் விளைவுகளே ஆகும்.

எனவே தமிழ் மக்கள் தனிநாடமைத்துக் கொள்வதற்காக இன்று முன்னெடுக்கும் விடுதலை யுத்தத்தின் வெற்றிக்கு, யுத்தத்தில் விடாப்பிடியாக ஊன்றி நிற்பதும், ஜனநாயக அரசியல் பாதையைக் கடைப்பிடிப்பதும் அவசியத் தேவையாகிவிட்டன.

## "இஸ்லாமியத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை" பற்றி

சுயநிர்ணய உரிமை என்றால் என்ன? ஒரே அரசின் கீழ் உள்ள பல தேசிய இனங்கள் அதே அரசின் கீழ் வாழ்வதா, பிரிந்து சென்று தனியரசு அமைத்துக் கொள்வதா என அந்தந்த இனத்து மக்கள் தாமாகவே முடிவெடுக்கும் உரிமையிது. ஒரு தேசிய இனம் ஒரு அரசிலிருந்து பிரிந்து செல்ல விரும்பினால் அவ்வாறு பிரிந்து செல்வதற்கு அதற்குச் சுதந்திரம் இருக்கவேண்டும் என்ற ஜனநாயக உரிமை இது. சுயநிர்ணய உரிமை என்றால் பிரிந்து செல்லும் உரிமையே. "சுயநிர்ணய உரிமை என்பதை தனி அரசாக நிலவும் உரிமை என்ற பொருளில் அன்றி வேறு விதமான பொருளில் வியாக்கியானம் செய்வது தவறானது" என்றார் லெனின். (லெனின் - தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை). பல இனங்கள் ஒரே அரசின் கீழ் வாழ்ந்தால் அங்கு பிரிந்து செல்லும் உரிமை நிலவும்போதுதான் இனசமத்துவத்தை ஏற்படுத்த முடியும். இத்தகைய இன சமத்துவம் என்ற இடைக்கட்டத்தின் மூலம்தான் தேசங்களின் பரிபூரண ஐக்கியத்தை நோக்கி முன்னேற முடியும். அனைத்து இனங்களின் சமத்துவத்துக்காகப் போராடுவது முதலாளி வர்க்கத்தின் நோக்கமல்ல. அது தனது 'தேசிய உரிமை'களைப்பற்றி மட்டுமே கவலைப்படும். பாட்டாளி வர்க்கம் மட்டுமே அனைத்து இனங்களின் சமத்துவத்தை, முரண்பாடற்ற ஜனநாயகத்தை நோக்கமாகக் கொண்டது. எந்த அரசின்கீழ் இருப்பது என்பது மக்களின் விருப்பங்களின்படி தீர்மானிக்கப் படுவதாகவும், விரும்பினால் பிரிந்து போகவும் உரிமை இருக்கக்கூடிய நிலையில்தான் தேசிய ஒடுக்குமுறைகளை ஒழிப்பதற்கான வாய்ப்புக்கள் யதார்த்தமாகின்றன. அத்தகைய ஜனநாயக ரீதியில் அமையப்பெற்ற அரசு நிறுவப்படுவது ஜனநாயகப் புரட்சியைப் பூர்த்திசெய்து சோஷலிஸத்துக்கு முன்னேறுவதற்கும்கூட முன்நிபந்தனையாகும். ஆகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டாளி வர்க்கம் புரட்சிக்கு முன்புமட்டுமல்ல புரட்சிக்குப் பின்பும் சோஷலிஸத்தின் கீழும்கூட சுயநிர்ணய உரிமையை உயர்த்திப் பிடிக்க வேண்டும். இனசமத்துவத்தை நிலைநாட்ட வேண்டும். அத்துடன் இது ஏகாதிபத்திய சகாப்தமாக இருப்பதனால் பழைய வகைப்பட்ட உலக முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சிக்காலம் ஏற்கெனவே முடிந்து உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்காலம் தொடங்கி விட்டபடியால் தேசிய இனப்பிரச்சனை உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நடைபெறும் புரட்சிகளின் பகுதியாகிவிட்டது.

சுருங்கச் சொன்னால், சுயநிர்ணய உரிமை என்பது தனியரசாக நிலவும் உரிமை. அதனை அங்கீகரித்து, மக்களின் சுய விருப்பத்தின்படி ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்களை ஒன்றிணைக்கும் அரசே ஜனநாயக அரசாக அமையும். இத்தகைய ஜனநாயக அரசு ஜனநாயகப் புரட்சிக்கு மட்டுமல்ல சோஷலிஸப் பரட்சிக்கும் முன்நிபந்தனையாக அமைக்கிறது. இன்றைய உலகப் பாட்டாளி வர்க்கப் புரட்சிக் கட்டத்தில் தேசிய இனப் பிரச்சனை உலகப் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் நடைபெறும் புரட்சிகளின் பகுதியாகிவிட்டது.

இலங்கையில் இஸ்லாமியத் தமிழர்கள் வாழும் பிரதேசம் ஒரு தேசமாக இல்லை. இதனால் அம்மக்கள் ஒரு தனியரசை அமைத்து வாழ முடியாது. ஏதாயினும் ஒரு தேசிய இன அரசின் கீழ்த்தான் வாழ முடியும். ஒரு தேசமாக அமையாத மக்களுக்கு தேசியத் தனியரசு அமைப்பதற்கான உரிமைபற்றிப் பேசுவது நகைப்பிற்குரியது ஆகாதா?

அவர்கள் ஒரு தேசமாக - தேசிய இனமாக - இலலையென்பது இலங்கை அரசின் கீழா அல்லது அமையப்போகும் தமிழீழ அரசின் கீழா தாம் வாழ்வது என்பதைத் தீர்மானிக்கும் உரிமை அந்த மக்களுக்கு இல்லையென்பதைக் குறிக்கிறதா? இல்லை. அவ்வாறில்லை. அவர்கள் அந்த உரிமையுடையவர்கள் எவ்வளவு நியாயங்கள் இருப்பினும் அம் மக்களின் சுய விருப்பத்துக்கு மாறாக அவர்களை தமிழீழ அரசின்கீழ் கட்டாயமாக இணைப்பதற்கோ அல்லது தமிழீழத்திலிருந்து வெளியேற்றுவதற்கோ எவருக்கும் உரிமை கிடையாது. கட்டாய இணைப்பு மக்களின் சுய விருப்பத்தை மீறுகிறது. இம்முறையில் இன சமத்துவத்தை நிலைநாட்ட முடியாது. இது ஜனநாயக விரோதமானது. எதிர்க்கப்பட வேண்டியது.

ஒருபுறம் சிங்களப் பேரினவாத பாசிஸ இலங்கை அரசும் மறுபுறம் விடுதலைப் புலிகளின் அரசுமுறைபற்றிய கண்ணோட்டம் ஒரு வர்க்கத்தின் ஏகபோக, ஒரு படையின் சர்வாதிகாரம் என்ற பாஸிசத் தன்மை கொண்டதாகவும் இருப்பதும் இஸ்லாமியரின் எதிர்காலத்தைக் கேள்விக்குரியதாக்கியுள்ளது. தமிழீழநாட்டில் சிறுபான்மை மதப்பிரிவினராக இருக்கும் அவர்களது மதஉரிமை உள்ளிட்ட அனைத்து ஜனநாயக உரிமைகளும் பாதுகாக்கப்படுமா என்ற அச்சம் நிலவுகிறது. இதனை உறுதி செய்வதாகவே விடுதலைப் புலிகளின் செயல்கள் அமைந்துள்ளன.

இதற்குப் பதிலாக தமிழீழ நாட்டில் இஸ்லாமியத் தமிழர்கள் வாழும் பகுதியை, அவர்களது மதஉரிமை உள்ளிட்ட அனைத்து ஜனநாயக உரிமைகளையும் பாதுகாக்கும் சுயாட்சி அதிகாரம் கொண்ட மாநிலமாக அமைப்பதே இப் பிரச்சினைக்கான ஜனநாயகத் தீர்வாக அமையும். இத்தகைய ஜனநாயகத் தீர்வுக்கு ஆதரவாக இஸ்லாமியத் தமிழர்களை வென்றெடுக்க முயல்வதே இன்று செய்யவேண்டிய உடனடிப் பணியாக உள்ளது.

இதனைச் சாதிக்க, சிங்களப் பேரினவாத பாசிஸ அரசான பிரேமதாஸ அரசையும், அதனை நிலைநிறுத்த நடத்தப்படும் இன ஒடுக்குமுறை யுத்தத்தையும் எதிர்க்க வேண்டும். தமிழீழத் தனியரசை நிறுவி தமது அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாக்க தமிழ் மக்கள் நடத்தும் விடுதலை யுத்தத்தை ஆதரிக்க வேண்டும். விடுதலை யுத்தத்தில் ஊன்றிநிற்கிற வரையில் விடுதலைப் புலிகளுடன் ஐக்கியப்பட வேண்டும். விடுதலைபெற்ற தமிழீழத்தில் ஒரு ஜனநாயக விரோத அரசை ஸ்தாபிக்கும் நோக்கில் இன்று விடுதலைப்புலிகள் செய்துவரும் ஜனநாயகவிரோதச் செயல்களை எதிர்த்துப் போராடவேண்டும். இஸ்லாமியத் தமிழரின் பிரச்சனைக்குத் தீர்வாக மாநில சுயாட்சியை முன்வைத்து விடுதலைப்புலிகளின் கட்டாய இணைப்புக் கொள்கையை எதிர்க்கவேண்டும். ஆண்டாண்டு காலமாக அவர்கள் வாழ்ந்துவந்த தமிழீழத் தாயகத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்டதைக் கண்டித்து, அங்கு இஸ்லாமியத் தமிழர்களின் வாழும் உரிமையை நிலைநாட்டப் போராடவும்வேண்டும். விடுதலைப் புலிகளின் ஜனநாயக விரோதச்செயல்களை சாட்டாக வைத்து இஸ்லாமியத் தமிழர்களை இலங்கையின் இனஒடுக்குமுறை அரசுடன் கட்டிப்போட முயலும் அஷ்ரப் போன்ற யூ.என்.பி அடிவருடிச் சமாசவாதிகளைத் தனிமைப்படுத்த வேண்டும்.

இதன்மூலமே விடுதலை யுத்தத்தில் ஊன்றிநின்று தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசை அமைக்க, இலங்கையில் ஒடுக்கப்படும் தமிழ்பேசும் மக்களின் ஒன்றுபட்ட ஜனநாயக இயக்கத்தைக் கட்டியமைப்பது சாத்தியமாகும்.

(17 Dec. 1992)

பனிமலர்
முகவரியில் மாற்றம்

BM PANIMALAR
LONDON
WC1N 3XX
UK.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைக்குத் தீர்வு என்ன?

விவாதம் பற்றி:

இலங்கையில் தமிழ்பேசும் மக்கள்மீதான இன ஒடுக்குமுறைக்குத் தீர்வுகாண பின்வரும் கொள்கைகள் அடிப்படையாகக் கருதப்படுகின்றன.

1. ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.
2. தமிழீழத்தில் தனியரசமைத்தல்.
   அ) ஒரு படையின் சர்வாதிகார தமிழீழ அரசு.
   ஆ) தமிழீழ மக்கள் ஜனநாயகக் குடியரசு.
3. சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத "அதிகாரப் பரவலாக்கம்."

இக்கொள்கைகள் மக்கள் மத்தியில் போதுமான விவாதத்திற்கு உள்ளாகவில்லை. இவற்றில் ஒன்றை ஏற்பதும் ஏனையவற்றை நிராகரிப்பதும் தெளிவான எல்லைகளை, ஆதாரங்களைக் கொண்டதாக இல்லை.

எந்தக் கொள்கை ஜனநாயகத்தைப் பாதுகாக்கும், எந்தக் கொள்கையின்மூலம் இனசமத்துவத்தை நிலைநாட்டலாம் என்ற பிரச்சனை தீர்க்கப்படாமையால் போராட்டம் முக்கிய அரசியல் திருப்பங்களைச் சந்திக்கும் போதெல்லாம், "தீர்வு என்ன?" என்ற கேள்விக்குள்ளாகிறது. இலங்கை அரசு ஒரு புறம் யுத்தம், மறுபுறம் பேச்சு வார்த்தை என்ற இரட்டைத் தந்திரத்தைக் கையாண்டு வருகின்றது. இந்தத் தந்திரத்துக்குப் பலியாகாமல் இருக்க வேண்டுமானால் எந்தக் கொள்கையின் அடிப்படையில் அரசியல் தீர்வு காண்பது என்பதில் திட்டவட்டமான முடிவு இருக்கவேண்டும். இதில் குழப்பம் இருப்பதனால் எதிரிகள் மக்களைப் பல வழிகளில் அலைக்கழிக்க முடிகிறது. மக்கள் தரப்பிலுள்ள சக்திகளை தமது தரப்பிற்கு வென்றெடுக்க முயல்கிறார்கள். இதில் வெற்றியும் அடைந்துள்ளார்கள். இவை மக்களின் போராட்ட உறுதியைப் பலவீனப் படுத்துகின்றன. மக்களுடைய விடுதலை உணர்வு பலவீனமடையுமானால், முன்னணிப் போராட்டச் சக்திகள்கூட உறுதியாய்ப் போராடமுடியாது.

மேலும் இக்குழப்பங்கள் மக்களின் எதிரிகளையும், நண்பர்களையும் பாகுபடுத்துவதில், எதிரிகளுக்கிடையிலும், நண்பர்களுக்கிடையிலும் உள்ள முரண்பாடுகளைக் கையாள்வதில் தவறிழைக்கவும் காரணமாக அமைகிறது. சுமார் 20 ஆண்டு காலப் போராட்டம் இப்பிரச்சனைகளைக் கொள்கையளவில் தீர்த்துக்கொண்டு விட்டதாகச் சொல்ல முடியாது. இந் நிலைமையே மேற்படி விவாதத்தை அவசியமாக்குகின்றது.

இது ஒரு விவாத அரங்கம். இதில் எல்லா முரண்பட்ட கருத்துக்களும் இடம்பெற வேண்டும். இம் முரண்பட்ட கருத்துக்கள் சமுகத்தில் இருக்கிற முரண்பட்ட சிந்தனைகளின் வெளிப்பாடாகும். எனவே கருத்து முரண்பாடுகளை தனிநபர் அல்லது ஸ்தாபன முரண்பாடுகளாக குறுக்குவது சரியான பார்வை ஆகாது. கருத்து முரண்பாடுகளை கருத்து ரீதியான போராட்டத்திற்கு உட்படுத்துவது முதன்மையானதாகும். இது கருத்துக்களின் சரியான தவறான தன்மையைக் கண்டறியவும், கருத்துக்கள் வளர்ச்சியடையவும், கருத்துக்களின் அடிப்படையில் அணிசேர்க்கைகளை உருவாக்கிக் கொள்ளவும் வழிகோலும். இத்தகைய ஜனநாயக அணுகுமுறையை கடைப்பிடிப்பதுஇவ் விவாதத்திற்கு விரிவான களத்தைத் தேடித்தரும் என நம்புகின்றோம்.

இவ்வாறான விவாதங்களை ஏற்கெனவே தொடங்கி நடத்திவருகின்ற 'தூண்டில்' (ஜேர்மனி), 'உயிர்ப்பு' (லண்டன்) போன்ற சஞ்சிகைகளோடு பனிமலரும் இணைந்து கொள்கிறது.

பெங்களூரிலிருந்து வெளிவந்த 'படிகள்' சஞ்சிகை 80களின் ஆரம்பத்தில் இவ் விவாதத்தைத் தொடக்கியது. எனினும் 6 கட்டுரைகளுடன் அவ் விவாதம் நின்று விட்டது. அவ் ஆறு கட்டுரைகளையும் (மூன்று இதழ்களில்) வெளியிடுவதன் மூலம் 'பனிமலர்' அவ் விவாதத்தை மீண்டும் தொடங்குகின்றது.

இவ் விவாதத்தைத் தொடர வாசகர்கள், சஞ்சிகைக் குழுக்கள், பத்திரிகையாளர்கள், அறிவு ஜீவிகள், அரசியற் கட்சிகளைச் சேர்ந்தோர் ஆகியோரிடமிருந்து கட்டுரைகளை எதிர்பார்க்கின்றோம்.

இவ் விவாதத்தை சஞ்சிகையின் எல்லைக்கு அப்பாலும் பரவலாக்குவதற்கான வழிவகைகள் பற்றிச் சிந்திக்குமாறும், ஆலோசனை வழங்குமாறும் வாசகர்களை வேண்டுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவாதம்.

# தமிழ் ஈழத்தேசிய வாதம் குறித்து

*சிவசேகரம்.*

1. இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைகள் கடந்த சில ஆண்டுகளில் உக்கிரம் அடைந்துள்ளன. இந்தச் சூழ்நிலையில் தமிழர்கட்குத் தனிநாடு (தமிழ் ஈழம், ஈழம்) வேண்டும் என்ற கருத்து பிரச்சார அளவில், இலங்கையிலும் வெளியிலும் வலுவடைந்துள்ளது. ஆயினும் 'ஈழ விடுதலை' இயக்கங்களிடையே உள்ள கருத்து மோதல்களை விலக்கிவிட்டுப் பார்த்தாலும் தனிநாடு பற்றிய பல அடிப்படைக் கேள்விகட்குத் திருப்திகரமான பதில் இல்லை. இந்தப் பிரச்சனை முழுவதையும் ஒரு கட்டுரைக்குள் ஆராய முடியாது. ஆனால் ஈழத் தேசிய வாதத்தின் வரலாற்று அடிப்படையும் வளர்ச்சியின் சூழ்நிலையும் தொடர்பான சில விஷயங்களையும் வளர்ச்சியின் சூழ்நிலையும் தொடர்பான சில விஷயங்களையும் சில பிரிவினை வாதிகளது 'முற்போக்குத் தோற்றம்' பற்றியும் இக்கட்டுரையில் எழுதுகிறேன். இது எழுப்பக்கூடிய விவாதங்கள் பிரச்சனையின் பல அம்சங்களைப் பலரும் வெவ்வேறு கோணங்களினின்று ஆராய வழி அமைக்கக்கூடும்.

2. தமிழ் ஈழம் எனும் ஒரு தேசம் (அதாவது இலங்கையின் வட, கீழ் மாகாணங்களைக் கொண்ட பிரதேசமும் அதன் மக்களும்) இலங்கை அந்நியராட்சிக்கு உட்படும்வரை இருந்ததாகவும் பிரித்தானியர் வருகையால் முழு இலங்கையையும் ஒரு நாடாகும் சூழ்நிலை வரும்வரை தமிழ் ஈழத்தின் தனித்துவம் நிலைத்திருந்ததாகவும் கருத்து முன்வைக்கப்பட்டு அதன் அடிப்படையில் தமிழ் ஈழம் கோரப்படுகிறது.

இலங்கை ஒரு சில காலகட்டங்கள் போக கொலனித்துவத்தை முந்திய அதன் 2000 வருஷ வரலாற்றில் ஒரு தனி அரசின் கீழ் இருந்ததில்லை. ஆனாலும் அரசுகள் மொழிவாரித் தேசீய அடிப்படையில் அமைந்தனவும் அல்ல, ஆளப்பட்ட பிரதேசங்கள் குடிப்பெயற்சிக்கு அப்பாற்பட்டனவாய் இருந்தனவும் அல்ல. இலங்கையின் ஆட்சி அமைப்புக்கள் தென் இந்திய உறவுகளால் (பகைமைகளால்?) அடிக்கடி மாற்றங்கட்கு உட்பட்டதும் உண்மை. போர்த்துக்கேயரின் வருகை இந்திய அரசுகளின் சரிவை அடுத்து நடந்த ஒன்று என்பதாலும் அவர்களது ராணுவ மேன்மையாலும் இலங்கையின் சரித்திரம் புதிய திருப்பங் கண்டது. போர்த்துக்கேயரதும் அடுத்து வந்த டச்சுக்காரரதும் 300 வருஷ ஆட்சி சாதிக்காததை பிரிட்டிஷார் 19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சாதித்தனர். சுதந்திரமாக இயங்கிய கண்டி ராஜ்யத்தையும் தம் அதிகாரத்தின் கீழ் கொண்டுவந்து முழு நாட்டுக்கும் ஒரு அரச நிர்வாகத்தை ஏற்படுத்தினார்கள்.

போர்த்துக்கேயர் வட இலங்கையை வேறாக நிர்வகித்தார்கள். அவர்கள் வரும்வரை வடக்கில் தமிழர் ஆட்சி நடந்தது என்கிற வாதங்கள் எல்லாவற்றையும் நியாயம் என்றே (வாதத்திற்காக) எடுத்துக் கொண்டாலும், தமிழர் ஆண்டு இழந்த நாடும் இவர்கள் கேட்கும் ஈழமும் ஒன்றே அல்ல. ஆனாலும் ஈழம் என்ற ஒன்றை நியாயப்படுத்தக் கிளறப்படும் இந்த வரலாற்று ஒட்டு வேலைகளை நீக்கிவிட்டுப் பார்த்தால் பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் இணைந்த கண்டி ராஜ்யம் உட்பட முழுத் தீவினரும் இலங்கை ஒரு தேசம் என்பதனை ஏற்றுக் கொண்டதோடு இன வேறுபாடுகளையும் மீறிப் பின்னப்பட்ட சமுதாய, வர்த்தக, கலாச்சார உறவுகளை ஏற்படுத்தினர். முக்கியமாக வட பிரதேசத் தமிழர்கள் அரச நிர்வாகம் மற்றும் தொழில்கள் மூலம் பிற பிரதேசங்களுக்கும் பரவியதுடன் சில மாநகரங்களில் கணிசமாக நிரந்தர அடிப்படையில் குடியேறினர்.

தமிழ் ஈழம் என்ற கருத்து முதலில் பகிரங்கமாக முன்வைக்கப்பட்டது 1956 சிங்கள மொழிச்சட்டத்தை அடுத்தே எனலாம். இதனை முன்வைத்த சுந்தரலிங்கமும் 1959ல் முன்வைத்த நவரத்தினமும் தமிழர் அரசியலில் இருந்து ஒதுக்கப்பட்டவர்களானார்கள். தமிழரசுக்கட்சி (alias Federal Party) 1950 முதல் சமஷ்டி (federation) கேட்டதே தவிர தனிநாடு அல்ல. பாராளுமன்ற அரசியலின் நிர்ப்பந்தங்கள் இவர்களை எப்படித் தமிழ் ஈழத்திற்குத் தள்ளியது என்பதை வேறொரு சமயம் பார்க்கலாம். ஆனாலும், 1971 பங்களாதேஷ் பிறப்பு இலங்கையில் அப்போது இருந்த சூழ்நிலையிற் பிரிவினைபற்றி நினைக்கக் கூடியவர்கட்கு அது சாத்தியம் என்ற உற்சாகத்தைக் கொடுத்தது என்பது குறிப்பிடத்தக்க அளவில் உண்மை. ஆனாலும் சகலவிதமான பாராளுமன்ற அரசியல்வாதிகளையும் இணைத்துத் தமிழர் ஐக்கிய முன்னணி ஏற்படுத்தி அது பிறகு தமிழர் விடுதலை முன்னணியாகப் பிரகடனம் செய்யப்பட்டது எல்லாம் 1972 அரசியலமைப்புச் சட்டத்தை அடுத்து நடந்த விஷயங்கள். இதற்கான சந்தர்ப்பவாத அரசியல் சூழ்நிலைகளைப்பற்றி இங்கு விளக்க இடம் போதாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தமிழ்ப்பேசும் மக்கள் எனப்படும் 3 மில்லியன் (30 லட்சம்) பேரின் சார்பில் தமிழ் ஈழம் கேட்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. (இலங்கையின் ஜனத்தொகை 14 மில்லியன்). இந்தத் 'தேசிய இனத்தின்' ஒருமைப்பாட்டை இனிப் பார்ப்போம்.

தமிழ்பேசும் இனத்தின் 25%க்குச் சற்று அதிகமான முஸ்லிம்கள் தம்மை ஒரு தனி இனமாகவே கருதியும் நடந்தும் வந்திருக்கிறார்கள். அவர்களது 'தமிழ் இன' அரசியல் எல்லாமே அவர்களது தலைவர்கள் பாராளுமன்றத் தேர்தல் தந்திரோபாயங்களாக இருந்தனவே தவிர அவர்கள் தேசிய அடிப்படையில் தங்களைச் சோனக இனத்தவர்களாகவும் மொழி தவிர்ந்த வேறு எவ்விதத்திலும் தமிழர்களினின்று வேறுபட்டவர்களாகவே கருதியதில் எதுவிதமான தெளிவீனமும் இருக்கவில்லை. ஈழத்தமிழ்த் தேசியவாதத்தில் முஸ்லிம்களது பங்கு என்றுமே குறிப்பிடக் கூடியதாக இருந்ததில்லை. பிரிவினைக் கோரிக்கைக்கு முஸ்லிம் ஆதரவு இல்லையென்றே சொல்லலாம். சோனக முஸ்லிம்கள் இலங்கை முழுவதும் பரவியிருப்பது இவர்கள் தேசிய ஒருமைப்பாட்டை விரும்புவதற்கு ஒரு முக்கிய காரணியாக இருக்கலாம். ஆனாற் 'தமிழர் தலைமை' பற்றிய இவர்களது நம்பிக்கையீனம் புறக்கணிக்கத்தக்க ஒன்றல்ல.

மலையகத் தமிழர்கள் பெரும்பாலும் இரண்டொரு நூற்றாண்டுக்கு முன்பு தோட்டங்களில் வேலைசெய்யக் கொண்டுவரப்பட்டவர்களின் பரம்பரையினர். இவர்களைச் சுரண்டுவதில் ஆங்கிலேயர் போக அடுத்த மட்டத்தில் தோட்ட உத்தியோகத்தவர்களாக இருந்த வட, கிழக்குத் தமிழர், முக்கியமாக யாழ்ப்பாண மாவட்ட உயர்சாதியினர், வகித்த பங்கு இவர்கள் மத்தியில் ஏற்படுத்திய மனக்கசப்பு ஒருபுறம் இருக்க, 1948 பிரஜாவுரிமைச் சட்டத்தில் வட, கிழக்கு மாகாணத் தமிழர் தலைவர்கள் பலர் நடந்துகொண்ட விதம் மலையகத் தமிழருக்கும் மற்றத் தமிழருக்கும் இடையே நிரந்தரமாகவே ஒரு அரசியல் அகழியை ஏற்படுத்தியது. தமிழரசுக் கட்சி தோட்டத் தொழிற் சங்கங்கள் நிறுவ எடுத்த முயற்சிகள் படுதோல்வி அடைந்தன. சிங்கள மொழிச் சட்டம் வட, கிழக்கு மாகாணங்களைப் பாதித்த விதத்திற்கும் மலையகத் தமிழர்களை அது பாதித்த விதத்திற்கும் இருந்த வேறுபாடு, பின்னர் வந்த பல பிரச்சனைகளிலும் அவதானிக்கக்கூடிய ஒன்றாகவே இருந்தது. சிரிமா-சாஸ்திரி உடன்படிக்கையை அடுத்து மெல்லமெல்ல மலையகத் தமிழரில் பெரும்பாலோர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டு வருகிறார்கள். மிகுந்திருப்பவர்களில் அனேகமாக அனைவரும் மலைநாட்டில் தமது வாழ்வுபற்றிச் சிந்திக்கிறார்களே ஒழிய, தமிழ் ஈழத்தில் தம் எதிர்காலம் பற்றித் திட்டமிடவில்லை. தமிழ் ஈழத்தில் இவர்கள் எதையும் எதிர்பார்க்காததற்கான காரணங்கள் கடந்தகால வரலாற்றை நோக்கும்போது நியாயமானவையாகவே படுகின்றன. வட, கிழக்கு மாகாணங்களுடன் பிரதேசத் தொடர்பின்றி சிங்கள மக்கள் வாழும் பகுதிகளில் உள்ள இவர்களது அரசியலும் வாழ்க்கை முறையும் வடக்கிலும் கிழக்கிலும் உள்ளவர்களை இவர்களிடமிருந்து மிகவும் வேறுபடுத்துகிறது.

மீதமிருக்கும் தமிழர்களில் கணிசமான தொகையினர் வட, கிழக்கு மாகாணங்கட்கு வெளியே கொழும்பிலும் பிற சிங்களப் பிரதேசங்களிலும் நிரந்தரமாகவோ, தற்காலிகமாகவோ குடியேறியிருக்கிறார்கள். 1958, 1977 இனக்கலவரங்களைத் தொடர்ந்து இவர்கள் திரும்பவும் இதே பிரதேசங்களில் வாழ மீண்டிருப்பது இவர்களது வாழ்க்கை எவ்வளவு தூரம் இலங்கையின் பிற பகுதியினருடன் பிணைந்திருக்கிறது என்பதை விளக்கும்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர் மத்தியில் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஆதரவு இருக்கிறது என்னவோ உண்மை. ஆனால் பிரிவினை பற்றிய உற்சாகம் என்னவோ கேள்விக்குரிய விஷயம். கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் இப்போது கிட்டத்தட்ட 35-40 சதவீதம் அளவிலேயே உள்ளனர். தமிழர் வாழும் பிரதேசங்கள் எல்லாமே தொடர்ச்சியானவையும் அல்ல. இது பிரிவினை கிழக்கு மாகாணத்தில் ஏற்படுத்தக்கூடிய சிக்கல்கட்கு ஒரு சிறு எடுத்துக்காட்டு. இதேபோன்று மன்னார் மாவட்டத்தில் (வடமாகாணம்) கணிசமான முஸ்லீம்கள் உள்ளனர். இவர்கள் மத்தியில் பிரிவினைகிகு ஆதரவு இல்லை. வவுனியா மாவட்டம் (வடமாகாணத்தின் தென்பகுதி) கூட இன்று கணிசமான சிங்களக் குடியேற்றத்துக்கு உட்பட்டு விட்டது. ஆகவே முழுமையாகத் தமிழர் வாழுவதும் பிரிவினைக்கு ஆதரவு இருக்கக்கூடியதும் சாத்தியமானதுமான பகுதி வடமாகாணம் அல்லது அதன் ஒரு பகுதி (பெரும்பகுதிதான்!) எனலாம். இங்கு வாழ்வோர் ஈழ விடுதலை கோருவோர் கூறும் 3 மிலியனில் மூன்றில் ஒரு பங்கு தேறுவார்களா?


பிரிவினைக் கோரிக்கைக்கு உண்மையிலேயே ஆதரவு உள்ளதா என்பதே கேள்விக்குரிய விஷயம். தமிழர் மத்தியில் த.வி.கூ. பெறும் ஆதரவு முக்கியமாக இன்று தமிழர் மத்தியிலே 'தேசிய'க் கட்சிக்கு ஆதரவு இல்லாமையாலும் முக்கியமாக வலதுசாரிகளதும் சில இடதுசாரிகளதும் சிங்கள இன வாதப் போக்காலும் சாத்தியமான ஒன்று. த.வி.கூ.கூட எவ்வளவுதூரம் பிரிவினையை விரும்புகிறது என்பதும் ஒரு ரஸமான விவகாரம்.

4. தமிழ் பேசும் மக்களுக்குப் பாதகமான முறையில் இலங்கை அரசாங்கங்கள் தொடர்ச்சியாகச் செயற்பட்டு வந்திருப்பது மறுக்கமுடியாத விஷயம். ஆனால் ஈழத் தேசிய வாதம் தோன்றியது முன்கூறியதுபோல 1971க்குப் பிறகுதான். இது தமிழரசுக் கட்சி தோற்றுவித்த த.வி. கூட்டணியைப் பொறுத்தவரை 'நாயர் புடிச்ச புலிவாலு' மாதிரி.

இலங்கையின் பொருளாதாரச் சிக்கல்களின் விளைவான வேலையில்லாத் திண்டாட்டம் பெரும்பான்மை இனவாத அரசாங்கங்களது பாரபட்சமான செயற்பாடுகளின் விளைவாக உயர்கல்வியையும் உத்தியோகங்களையும் நம்பியிருந்த யாழ்ப்பாணத் தமிழர்களைக் கடுமையாகப் பாதித்தது. கல்வி, வேலைவாய்ப்புக்களில் ஏற்பட்ட இழப்புக்கள் ஏற்படுத்திய புதிய சிக்கல்கள், தமிழரசுக் கட்சி தூண்டிவிட்ட தீவிரவாத வாலிபர்கள் மீது அரசாங்க அடக்குமுறை, யாழ்ப்பாண மாவட்டத்தில் போலிஸ்-ராணுவ அட்டூழியங்கள் எல்லாமே மேலும் அதிக வாலிபர்களைப் பிரிவினை வாதத்தையும் வன்முறையையும் பயங்கரவாதச் செயல்முறைகளையும் நோக்கி உந்தின. இவை 1977 தேர்தலின் பின்பு யாழ்ப்பாண மாவட்டத்தில் கலவர நிலையை மேலும்மேலும் உக்கிரப் படுத்தியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலங்கையின் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் பாராளுமன்ற அரசியலில் பயன்படுத்திய சந்தர்ப்பவாத வேலைமுறைகள் அவர்களை வடக்கிலும் கிழக்கிலும் வலிமை இழக்கச் செய்தன என்றால் மற்றைய இடதுசாரி இயக்கங்களில் சிலவும் (முக்கியமாக சில Trotsky வாதிகள், மொஸ்கோ சார்பு, பீகிங் சார்பு(?) கோஷ்டிகள் சில) சிங்களப் பிரதேசங்களில் பெறத்தவறிய ஆதரவை வடக்கிற் பெறுவதற்காகப் பிரிவினை வாதிகளுடன் கண்ணாமூச்சி விளையாட ஆரம்பித்தார்கள். 'பிரிவினை கேட்கும் உரிமையை ஆதரிப்பது பிரிவினையை எதிர்ப்பது' என்று லெனினை மேற்கோள் காட்டி என்னென்னவோ வித்தைகள் காட்டினாலும் இளம் பிரிவினைவாதிகள் இவர்களிடமிருந்து தனித்துத்தான் நிற்கிறார்கள். ஆனாலும் தமிழ் மக்களது உரிமைகளை ஆதரிக்கும் அதே சமயம் பிரிவினையை உறுதியாக எதிர்க்கும் மார்க்ஸிஸ்ட் இயக்கங்கள் நாட்டில் இருக்கவே செய்கின்றன.

பிரிவினைவாதிகள் மத்தியில் இன்று லெனினையும் ஸ்டாலினையும் (மாஓவையுங் கூட) மேற்கோள் காட்டி இளைஞர்களைக் கவர முனையும் போக்கும், 'சோஷலிஸ தமிழ் ஈழம்' (தமிழ் ஈழம் முதலில் அப்புறம் சோஷலிஸம்) போன்ற கோஷங்களும் சிலருக்கு மயக்கங்களை ஏற்படுத்தலாம். ஆனால், உண்மையென்னவென்றால், பாராளுமன்ற இடதுசாரிகளைக்காட்டி இடதுசாரிகளை எல்லாமே தாக்கி அலுத்துப் போய் இடதுசாரி இயக்கத்தினின்றும் தேசிய விடுதலைப் போராட்டத்தினின்றும் தமிழ் வாலிபர்களைப் பிரிக்கும் ஒரு தந்திரோபாயமாக இந்தக் கோஷங்கள் பயன் படுகின்றனவே தவிர இந்தச் 'சோஷலிஸ' ஈழக்காரர்கட்கு ஒரு மார்க்ஸியப் பராம்பரியம் என்றுமே இருந்ததில்லை. மற்றபடி இவர்களுடன் ஒளிந்து விளையாடும் 'இடதுசாரி' இயக்கங்கள் சிங்களப் பிரதேசங்களில் தமிழ் ஈழப் பிரச்சனைபற்றி அதிகம் அலட்டிக் கொள்வதில்லை. JVP (ஏப்ரல் 71 கிளர்ச்சியில் ஈடுபட்ட ஸ்தாபனத்தின் மீதம்) 1977ல் தமிழ் ஈழப் பிரிவினைக்கு ஆதரவு தெரிவித்துவிட்டு அடுத்த வருஷம் உள்ளூராட்சித் தேர்தல் நேரத்தில் 'என்ன விலை கொடுத்தும் பிரிவினையை எதிர்ப்போம்' என்று பிரகடனம் செய்தது நினைவில் வைத்திருக்க வேண்டிய விஷயம்.

இலங்கையில் பிரிவினைப் போராட்டத்தால் நன்மையடைபவர்கள் US, சோவியத் ஏகாதிபத்தியவாதிகள் மட்டும்தான். ஆகவே மாக்ஸிஸ்ட் லெனினிஸ்ட் இயக்கங்கள் பிரிவினையை ஆதரிக்க முடியாது. அதே சமயம் திட்டமிட்ட இனவாத ஒடுக்குமுறைகளை எதிர்ப்பதும் அவசியம். தமிழ்மக்கள் மத்தியில் சிறுபான்மை இனவாத அரசியல்மூலம் பிற்போக்குவாதிகள் நீண்டகாலமாக ஆதிக்கம் செலுத்தி வந்திருக்கிறார்கள். இதை முறியடிக்க வேண்டும். தமிழ்மக்களது பிரச்சனைகள் பற்றிப் பேசுவோர் பெரும்பாலும் நடுத்தர வர்க்கப் பிரச்சனைகளின் அடிப்படையிலேயே பிரச்சனைகளை அணுகி வந்திருக்கிறார்கள். பரந்துபட்ட வெகுஜனங்களது பிரச்சனைகளை எல்லாம் 'சிங்கள ஏகாதிபத்தியம்' பற்றிய உணர்ச்சிமயமான கோஷங்களை எழுப்பி மூடி வைப்பதில் பிரிவினைவாதிகளும் பிற தமிழ்ப் பிற்போக்கு வாதிகளும் வெற்றி கண்டிருக்கிறார்கள். இனவாத அரசாங்கங்களது வேலைகள் இந்த வெற்றிக்குத் துணைபோயிருக்கின்றன.

பிரிவினைவாதத்திற்குக் காரணம் ஆழமான தேசிய உணர்வல்ல; சில அன்றாடப் பிரச்சனைகள்தான் என்பதை நினைவில் வைத்திருந்தால் நல்லது. இவற்றை இன்றைய பாராளுமன்ற அரசியல் கட்சிகள் தீர்க்கப் போவதும் இல்லை. இப்போதைக்கு 'தமிழ் ஈழ' விடுதலைப் போராட்டம் என்கிறது எதையோ நினைத்துக் கொண்டு வேறு எதையோ இடிக்கிற சமாச்சாரம்தான். இலங்கையில் புரட்சிகர இயக்கத்தை வளராமல் தடுக்கும் விஷயங்களில் பிரிவினை வாதமும் ஒன்று. மாக்ஸிஸ்ட் லெனினிஸ்ட் இயக்கங்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

(நன்றி: படிகள்– 12, 1982)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ தேசியவாதம் குறித்து (- சிவசேகரம்): ஒரு பதிலுரை

- *ராஜசேகரம்*

இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்களின் பிரச்சனைகள் கடந்த சில ஆண்டுகளில் உக்கிரம் அடைந்துள்ளன. இந்தச் சூழ்நிலையில் தமிழர்க்குத் தனிநாடு வேண்டும் என்ற கருத்து பிரச்சார அளவில் இலங்கையிலும் வெளியிலும் வலுவடைந்துள்ளது. இவை சிவசேகரத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கூற்றுகள். அதாவது சிங்கள-தமிழ் மக்களிடையேயான முரண்பாடு கூர்மையுற்று, இனிமேல் தனிநாடு ஒன்றே தமக்கு சரியான மனிதத்துவ வாழ்வுக்கான வழியாகும் என்பதனை இலங்கைவாழ் தமிழ்பேசும் மக்கள் மட்டுமன்றி உலகெங்கும் உள்ள தமிழ்மக்களே உணர்ந்துள்ளனர் என சிவசேகரம் கூறுகிறார். ஆனால் இவர்கள் மத்தியில் தனிநாடு பற்றிய பல அடிப்படைக் கேள்விகட்கான பதில் திருப்திகரமாக இன்மை சிவசேகரத்தின் தீர்வுக்கான பாதையைத் திசைதிருப்பி விட்டது. எனவே இவர் எழுப்பிய அடிப்படைப் பிரச்சனைகள் குறித்து யானும் எனக்குத் தெரிந்தவரையில் ஆராய முற்படுகிறேன்.

இன்று தமிழ் மக்கள் தனிநாடு கோருவதற்குக் காரணம் அவர்கள் இந்தச் சிங்கள பெருந்தேசிய அரசின்கீழ் தமது உரிமைகளைப் பெற்று வாழ முடியாமையே தவிர தாம் முன்னர் ஆண்டவர்கள் தானே, மீண்டும் ஒருமுறை ஆண்டாலென்ன எனும் ஆட்சிபீட ஆசையினால் அல்ல. ஒருவேளை தமிழர்கள் முன்னர் தமக்கென ஒரு இராச்சியம் அற்று வாழ்ந்திருந்தாலும் தேசிய இனம் என்ற ரீதியில் அவர்கள் தம் பராம்பரிய பிரதேசங்களில் தம்மைத்தாமே ஆளும் உரிமை படைத்தவர்கள். நிலைமைகள் இவ்வாறு இருக்கையில் அவர்கள் தம்மைத்தாமே ஆளவில்லை என்றும், இழந்த ஈழமும் கேட்கும் ஈழமும் வேறு என்றும் கூறி தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தினைக் கொச்சைப் படுத்தாதீர்கள் என்று சிவசேகரம் போன்றோரைக் கேட்டுக் கொள்கிறேன். மற்றும் இலங்கை ஒற்றை ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டபோது தமிழ்மக்கள் இன வேறுபாடுகளை மீறிப் பின்னப்பட்ட சமுதாய, கலாச்சார, வர்த்தக உறவுகளை முழுமனதோடு ஏற்றனர். எனவே இவர்கள் தமிழ் ஈழம் கேட்கமுடியாது என்ற வாதம் எவ்வளவு அர்த்தமற்றது. தமிழ் மக்கள் இனவேறுபாடுகளை மீறி மனிதர்கள் என்ற ரீதியில் என்றுமே ஏனைய இன மக்களோடு கலக்கவே தயாராயிருந்தனர் என்பதனையே இவ் உறவுகளை முழுமனதோடு ஏற்றமை காட்டுகிறது. ஆனால் காலப் போக்கில் இது அவர்களது உரிமைகட்கே குழிபறிப்பிற்கு வழிவகுக்கவே அவர்கள் தாம் தனித்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவ்வாறு இவர்கள் தீர்மானித்தது தவறா?

1956ஐத் தொடர்ந்த காலப் பகுதியில் சுந்தரலிங்கம், நவரத்தினம் ஆகியோரது தனிநாட்டுத் தீர்மானம் மக்களால் நிராகரிக்கப்பட்டது உண்மையே. இதற்குக் காரணம் மக்கள் அன்று பாராளுமன்றம் மூலம் சமஷ்டி ஆட்சியில் தமது உரிமைகளைப் பெற்று வாழலாம் என நம்பியிருந்தனர். தொடர்ந்தும் அவையும் பயனளிக்காமையே மக்களைத் தனிநாட்டுக் கோரிக்கைக்குத் தள்ளியது. [இதற்கு பங்களாதேஷ் பிரிவினையும் நம்பிக்கையினைக் கொடுத்திருக்கலாம்.] இது அரசியல்வாதிகள் தமது இஷ்டப்படி மக்களை திருப்பமுடியாது என்பதைக் காட்டுகிறது. மக்கள் தனிநாடு எனும் நிலைக்கு வந்தமையே தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாடு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்ட காரணம். எனவே தனிநாடு தமிழரசுக் கட்சியினால் மக்கள்மீது திணிக்கப்பட்டது அல்ல. அதனை மக்கள் ஏற்றமையே தமிழரசுக் கட்சியை அதனைக் கேட்கும் நிலைக்குத் தள்ளியது எனலாம்.

முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரையில் சிவசேகரம் கூறுவதனைப்போல் அவர்கள் என்றும் இருந்தது இல்லை. ஆரம்ப காலங்களில் அவர்கள் தமிழ் தேசியவாதத்துடன் பிணைக்கப்பட்டவர்களாகவே காணப்பட்டார்கள். குறிப்பாக 1961ல் வட கிழக்கில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின்போது முஸ்லிம் மக்கள் ஆரம்பத்தில் தமிழ் பேசுபவர்கள் என்ற ரீதியில் தமிழ் தேசிய வாதத்துடன் பிணைக்கப் பட்டிருந்தனர். ஆனால் காலப்போக்கில் தமிழ் அரசியல் தலைமைகள் விட்ட தவறுகளாலும், சிங்கள அரசின் திட்டமிட்ட பிரித்தாளும் தந்திரத்தாலும் இன்று அவர்கள் தமிழ் தேசிய வாதத்திலிருந்து சிறிது விலகிச் சென்றுள்ளனர் என்பது மறுக்கமுடியாத உண்மையே. எனினும் அவர்கள் தொடர்ந்தும் அரசின் பிரித்தாளும் தந்திரத்திற்குப் பலியாவார்கள் என்று கூறமுடியாது. அண்மையில் நடைபெறும் தீகவாவி புனிதபிரதேசத் திட்டம் பல முஸ்லிம் மக்களை தம் நிலங்களை இழக்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது, தள்ளுகின்றது. மற்றும் மொழிவாரியான புறக்கணிப்பு இவர்களையும் பாதிக்கவே செய்கின்றது. எனவே அவர்கள் ஆரம்பத்தில் எவ்வாறு தமிழ் தேசிய வாதத்துடன் பிணைக்கப் பட்டிருந்தார்களோ அதேபோல், அதைவிட மேலாக, இனிமேல் பிணைக்கப்பட வேண்டியவர்களாக மாற்றமுறுவது தவிர்க்கமுடியாத அம்சமாகும். இது தொடர்பாக தமிழ் அரசியல் தலைமைகளும் சரியான கையாள்தலை மேற்கொள்ள வேண்டும் என்பதும் தவிர்க்கமுடியாத ஒரு அம்சமே.

மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலங்களில் யாழ் ஆதிக்கவாதத்தன்மை இருந்தது என்பதனை மறுப்பதற்கில்லை. ஆனால் இன்றைய காலகட்டத்தில் அங்கு யாழ்ப்பாணத்தவர்கள் வகித்த பதவிகளை சிங்களவர்களே வகிக்கின்றனர். இதனால் தொடர்ந்தும் அம் மக்களினை யாழ்ப்பாணத்தவர்கள் சுரண்டுகிறார்கள் என இன்றும் கூறுவது பொருத்தமற்றதாகவே உள்ளது. இன்று அவர்களது மனக்கசப்பு சிங்களவர்க்கு எதிராக மலர்கிறதே தவிர, யாழ்ப்பாணத்தவர் மீது உள்ளது என்பது எவ்வளவுதூரம் உண்மை என்பது கேள்விக்குரியதே. மற்றும் அண்மைய கலவரங்களிலும் பாதிப்புற்ற மலையக மக்களை, வட கிழக்கில் அவர்கட்குத் தேவையான நிலம், தொழில்வாய்ப்புக்களை வழங்கி அவர்களை இணைப்பதில் இங்குள்ள நிறுவனங்கள் சில முன்வந்து செயலாற்றுகின்றன. இதில் குறிப்பாக காந்திய அமைப்பினைக் கூறலாம். இவ்வாறு இவற்றையெல்லாம் நோக்காது, என்றோ தான் அறிந்த நிலையினை வைத்துக் கொண்டு யாழ்மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்களை நேசிக்கவில்லை என்று, மலையக மக்களை தமிழ் தேசிய வாதத்திலிருந்தும் பிரித்து நோக்குதல் சிறப்பான ஆய்வாக இருக்க முடியாது.

வட கிழக்கு தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் வாழும் தமிழர் 1958, 77 கலவரங்களின் பின்பும் திரும்பவும் அதே இடங்களிற்கு மீண்டிருப்பமை அவர்கள் அதே மண்ணுடன் பிணைக்கப்பட்டிருப்பதனைக் குறிக்கின்றது என்றும் அவர்கட்கு பிரிவினை தகுந்த பயனளியாது அவர்கள் விரும்ப மாட்டார்கள் என்றும் சிவசேகரம் வாதாடுகிறார். கொழும்பு மற்றும் இடங்களில் வாழும் தமிழர் அரச, தனியார் உத்தியோக வாய்ப்புக்களாலேயே தவிர்க்க முடியாதபடி மீண்டும் மீண்டும் அதே இடத்திற்கு திரும்பும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். சிங்கள அரசின் தமிழ்ப் பிரதேச அபிவிருத்திப் புறக்கணிப்பு இங்கு வாழும் அநேக தமிழரை வேலை நிமித்தம் பிற இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலைக்குத் தள்ளுகின்றது. எனவே கலவரங்களின் பின்பும் பிற இடங்களுக்கு (தம் வேலை ஸ்தலங்களுக்கு) நகரும் தமிழர் அந்த மண்ணில் உள்ள பாசத்தாலோ அல்லது தமது பராம்பரிய மண்ணின் மீதுள்ள வெறுப்பாலோ அல்ல. இவர்கள் உண்மையில் இன்று அங்கு தம் உயிர்களைக் கைகளில் ஏந்திய வண்ணமே வாழ்கிறார்கள்.



கிழக்கில் கூட்டணிக்கு ஆதரவு உண்டு ஆனால் பிரிவினைக்கு ஆதரவு இல்லை என்று எந்தவித ஆதாரமும் இன்றி இவர் கூறுவதனைக் கேட்க எனக்கு மிகவும் கவலையாக உள்ளது. கிழக்கு மாகாண மக்கள் கடந்த அம்பாறை அசம்பாவிதங்களின்போது தமது மக்களைக் காப்பாற்றுவதற்காக போராடியமை, கலவரத்தின்போது திருமலையில் மக்கள் எதிர்த்துப் போராடியமை என்பனவெல்லாம் எப்படித்தான் இவர் கண்கட்குத் தெரியாமல் போனதோ தெரியவில்லை. மற்றும் கிழக்கிற்கும் வடக்கிற்கும் தொடர்ச்சி இல்லை எனவே போராட முடியாது என்று கூறுவது வவுனியாவில் அரைவாசிக்குமேல் பறித்து விட்டார்கள், எனவே அதனை மீட்க முடியாது என்று இவர் பலவற்றினைக் கூறி தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் பலவீனமானது, சாத்தியமற்றது என நிறுவ முயல்கிறார். உண்மையில் வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடையிலான பிரதேச தொடர்ச்சியினை துண்டாக்கு முகமாக சிங்கள அரசு திட்டமிட்டு அங்கெல்லாம் சிங்கள மக்களைக் குடியேற்றுகிறது. மற்றும் எங்கள் பராம்பரியப் பிரதேசங்களில் எம் மக்களை அனாதைகளாக்கி தம் மக்களைக் குடியேற்றுகிறது. இத்தகைய அரசு ஒடுக்குமுறைகளை எதிர்த்தே இன்று தமிழ் மக்கள் தமது போராட்டத்தினை தொடக்கியுள்ளனர். எனவே இத்தகைய ஒடுக்கு முறைகளையே காரணங்களாகக் காட்டிப் பிரிவினை சாத்தியமில்லை என நிறுவ முயல்வது சரியான ஆய்வாக இருக்க முடியாது.

இறுதியாக இன்றைய சூழலில், இனவாத உணர்வு சாதாரண பாமர மக்களிடமும் மலர்ந்துள்ள சூழலில் முழு இலங்கைப் புரட்சி என்பது சாத்தியமான ஒன்றல்ல. கலவரங்கள் மற்றும் இனவாதச்செயல்கள் தமிழ் மக்களை பிரிவினையைத் தவிர வேறு எதிலும் நாட்டம் கொள்ளாத நிலைக்குத் தள்ளியுள்ளது. இன்றைய சூழலில் தமிழ் ஈழம் பிரிவதே தமிழ் மக்கட்கும், சிங்கள மக்கட்கும் சாதகமான ஒரு அம்சம். தமிழ் ஈழம் பிரியாத வரைக்கும், தமிழ்ப் பாட்டாளிகளும் சரி, சிங்களப் பாட்டாளிகளுஞ் சரி, தங்கள் பிரச்சனைகளை இனவாத ரீதியிலேயே பார்த்து சரியான புரட்சிகரப் பார்வையைச் செலுத்தத் தவறுவர். ஏனெனில் இங்கு சிங்கள தமிழ் முரண்பாடு கூர்மையுற்றிருப்பதே இதற்குக் காரணம். எனவே எந்த ஒரு சரியான மார்க்ஸிஸ்டும் தமிழ் ஈழ விடுதலை, உலக சோஷலிஸத்தினை நோக்கிய சமூக மாற்றத்திற்கு சரியான வித்தாகும் என்பதில் எந்த ஒரு ஐயமும் கொண்டிருக்க மாட்டான். அதேவேளை முற்போக்கு வாதிகளாகக் காட்டிக்கொள்ள விரும்பும் புரட்சிகரமாக வாழத் தெம்பில்லாத சிவசேகரம் போன்ற முகமூடிகளே இது தொடர்பாக பிரிவினை எதிர்ப்புப் பார்வையைச் செலுத்துவர்.

(நன்றி:படிகள்-13, 1982.)

---

**லண்டன் தமிழா! (2)**

*லண்டனிலே செந்தமிழ் வளர்ப்பார்*
*கண்டவிடம் பள்ளிகள் அமைப்பார்*
*பரிசவிழா கூட்டங்கள்*
*அரசியலில் தம்மிடையில்*
*சண்டையிலும் ஆங்கிலங் கதைப்பார்.*

**லண்டன் தமிழா! (3)**

*நாரி நட மாடுகிற தோற்றம்*
*ஆரணங்கின் ஆடல் அவை போற்றும்*
*நாளை முதல் ஆடாளாம்*
*நாட்டியத்தை நாடாளாம்*
*காரிகைக்கிம் மாலை அரங்கேற்றம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்துக் கவிஞர் அறிமுகம்
## இ. முருகையன்

மஹாகவியையோ, முருகையனையோ அறிமுகஞ் செய்வது சமகால ஈழத் தமிழ்க் கவிதையின் எழுச்சிநிலையை அறிமுகப்படுத்துவது போன்ற காரியம். மரபு சார்ந்த கவிதை வடிவிற்குள் முற்போக்கு அரசியற் சிந்தனையை வடித்துத் தந்த கவிஞர்களுள் முருகையன் முக்கியமானவர். அவரது இன்றைய ஆக்கங்கள் சில அவரைப்பற்றிய கடுமையான விமர்சனங்கட்குக் காரணமாகியுள்ளன. இந்த அறிமுகம் அவரது முக்கியமான முற்போக்கு இலக்கியப் பங்களிப்புக்குரிய காலகட்டத்தை (1989 வரையிலானதை) ஒட்டியது. முருகையனுடைய சிறப்பான ஆக்கத் திறமையையும் அவரது நகைச்சுவையுணர்வையும் விஞ்ஞானரீதியான சிந்தனையையும் இவற்றிற் காணலாம். அவரது கவிதைகள் பற்றிக் கைலாசபதியின் மதிப்பீட்டையும் கவிதைபற்றி முருகையனது கருத்துக்களையுங் கீழே தருகிறோம். நமது தெரிவான ஐந்து கவிதைகளும் அவரது கவிதை வீச்சை அளவிடப் போதா ஆயினும் பிரதிநிதித்துவஞ் செய்யப் போதுமானவை என நம்புகிறோம்.

*- (பனிமலர் ஆசிரியக் குழு)*

கனக-செந்திநாதன் தொகுத்து வெளியிட்ட "ஈழத்துக் கவிமலர்கள்" (1962) என்னும் நூலிலே முருகையனைப் பற்றி மேல்வருமாறு கூறப்பட்டிருக்கிறது. "இலங்கைச் சர்வகலாசாலையில் விஞ்ஞானப் பட்டம் பெற்ற முருகையனோடு ஈழத்தின் கவிதைப்பாதை ஒரு புதிய திருப்பத்தை அடைந்தது." மிக முக்கியமான ஒரு செய்தியின் இலகுபடுத்தப்பட்ட வடிவமே இக்கூற்று என்று எனக்குத் தோன்றுகிறது. "விஞ்ஞானத்தையும் மேற்குலக இலக்கியங்களையும் உள்வாங்கி ஆற்றல் மிக்க தமிழ்க் கவிதைகளைப் படைத்திருப்பவர் இலங்கைக் கவிஞர் முருகையன்." என்று திரு சி.வி.இராஜசுந்தரம் கட்டுரையொன்றிலே குறிப்பிட்டிருக்கிறார். முருகையனை அறிந்துகொள்வதென்பதே நவீன தமிழ்க் கதையின் ஒரு பகுதியை அறிந்து கொள்வதாகும்.

சாவகச்சேரியிலுள்ள கல்வயலில் 1935ம் வருடம் ஏப்ரல் மாதம், இருபத்துமூன்றாம் திகதி பிறந்த முருகையன், தமிழாசிரியர் இராமுப்பிள்ளையின் புதல்வர். கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் பயின்ற முருகையன் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் (1953-56) விஞ்ஞானமாணிப் பட்டத்தைப் பெற்றார். சைவப் பின்னணியில் அவரது இளமைக்கல்வி அமைந்தது கவனிக்கத்தக்கது. உணர்வுடன் கலந்த மரபுணர்ச்சி முருகையனிடமும் ஆழமாகக் குடிகொண்டுள்ளது. சொல்லிலும் பொருளிலும் அது பல்வேறு வழிகளிற் புலப்படுவதைக் காணலாம். முருகையனின் சொல்லாட்சி அலாதியானது. தீவிரமான கருத்தையோ உணர்வையோ எடுத்துக் கூறும்போதும், தமிழ் மணம் கமழும் தனிச்சிறப்பு முருகையன் கவிதைக்குண்டு.

பட்டம் பெற்றபின் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் விஞ்ஞான-கணித ஆசிரியராக ஏழாண்டுகள் (1956-1962) கடமையாற்றிவிட்டு அரசகரும மொழித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராகச் சேர்ந்து, அரசகரும-கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திலே பதிப்பாசிரியராகவும், பிரதம பதிப்பாசிரியராகவும் 1977வரை பணிபுரிந்தார். விஞ்ஞானத்தைத் தமிழ்ப் படுத்துவதிலும், கலைச் சொல்லாக்கத்திலும் ஏறத்தாழப் பதினைந்து வருடங்கள் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். மொழித்திறனும் மொழியாட்சியும் மேலும் திப்ப நுட்பமடைய இக் காலப் பகுதி வழிவகுத்தது எனலாம். கடந்த நான்கு வருடங்களாக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விரிவுரையாளராக இருக்கும் முருகையன் தற்பொழுது யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் முதுமாணிப் பட்டத்திற்கு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறார்.

முருகையன் பார்த்து வந்த வேலைகளும் கடமைகளும் விஞ்ஞானப் பின்னணியில் தமிழ் சம்பந்தமானவையாயும், கல்வித் தொடர்புடையனவாயும் இருந்தமை நோக்கத்தக்கது. இவற்றின் விளைவாக முருகையனது கவிதைகள் எப்பொழுதுமே ஆய்வறிவுப் பண்பையுடையனவாய் இருத்தல் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதாகும். உணர்ச்சி வெள்ளத்தில் அடிபட்டுப் போகாமல் நிதானித்து விஷயங்களை ஆழமாக நோக்கிக் கவிபாடும் நோக்கும் போக்கும் அவரின் சிறப்பியல்புகள்.

முருகையனது தத்துவவீச்சு எத்துணை முக்கியமோ, அத்துணை முக்கியமானவை அவர் மேற்கொண்டு வந்துள்ள கவிதை வடிவப் பரிசோதனைகள். நவீன தமிழில் காத்திரமான பரிசோதனைகளைச் செய்த கவிஞரில் முருகையனுக்குச் சிறப்பானதோர் இடம் உண்டு. இப் பரிசோதனைகள் யாவை? பல்வேறு வகை யாப்புகளையும் கையாண்டமை; நவீன கவிதைக்கு வேண்டிய உருவத்தை நோக்கிய தேட்டம்; புதுமைப் பித்தன், ரகுநாதன் ஆகியோரின் எடுப்பான கவிதை முயற்சிகளால் உந்தப்பட்டும், கவியரங்குப் பாமொழி அநுபவங்களினாலும், தான்தோன்றிக் கவிராயர் தொடர்பாலும் கவிதையிலே பேச்சோசையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மைப் படுத்தி வளர்த்தெடுத்தமை; (பிறிதோரிடத்திலே நான் எழுதியதுபோல, முருகையன் கவிதைமூலம் பிறருடன் 'உரையாடும்' பண்பை நன்குணர்ந்தவர்; கவிதை உயிர்த்துடிப்புள்ள இலக்கிய வடிவம் என்பதை நம்மவர்க்கு இக்காலத்தில் உணர்த்திய கவிஞரில் முக்கியமானவர் முருகையன்.) இதன் பயனாக கவிதை நாடக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையும், (மஹாகவி முதல் நு:மான் வரை) ஈழத்தின் பிற கவிஞர்கள் பலரின் மொழிநடையிலும் பேச்சோசைப் பண்பு பிரதானம் ஆகியமையும் மனங்கொள வேண்டியவை. பிரக்ஞை பூர்வமாக மொழியில் பரிசோதனைகள் நடத்தி வந்திருப்பவர் முருகையன். பழைய செந்தமிழ்ச் சொற்களோடு, கிராமிய, வட்டார வழக்குகளையும், ஆங்கிலச் சொற்களையும் தேவையை அனுசரித்து இலக்கியத்திற்குப் பயன்படுத்தும் நெறியை ஊக்கியமை முருகையனின் பங்களிப்பாகும். மிகச் சமீபகாலத்தில் செந்நெறிப் பாங்கான கடினமொழிப் பிரயோகத்தை நெகிழ்த்துவதிலேயே சிறப்பான கவனம் செலுத்தி வருகின்றார். உருவத்திற்கும் உள்ளடக்கத்துக்குமுள்ள நுட்பமான - இயங்கியல் ரீதியான - உறவைத் தெளிவுற உணர்ந்து கவிதை படைப்பவர் முருகையன். இக்காரணத்தாலேயே முருகையனைக் கவிஞர்க்குக் கவிஞன் என்று அடிக்கடி நான் குறிப்பிடுவது வழக்கம்.

கேவலம் காட்சிப் பொருள்களைக் கண்டு அவற்றின் உந்துதலினால் வருணனைக் கவிதைபாடும் "முதிரா இளைஞர்" பலரின் தொடக்க நிலைக்கு அப்பாற் சென்று, உள்ளத்தில் ஒவ்வொரு கணமும் தோன்றும் அரூபமான நுண்பொருட்களைச் சொல்வசப் படுத்தும் ஆன்மசக்தி - படைப்பாற்றல் - முருகையனிடம் நிரம்ப இருக்கிறது. தமக்கென உலக நோக்கையும் வாழ்க்கைத் தத்துவத்தையும் தேடுபவர் முருகையன். சித்தாந்தச் சார்பொன்றினைத் தேடித்தேடிச் செல்லும் ஆத்ம துடிப்பின் எல்லையிலேயே அவரது கவிதைகளிற் பெரும்பாலானவை பிறக்கின்றன. இத் தத்துவ வேட்கையும் கோட்பாட்டுத் தேடுதலும், இவற்றோடியைந்த உருவ-வடிவ-பரிசோதனைகளுமே முருகையனுக்குத் தனித்தன்மையை அளிக்கின்றன என்பது எனது கருத்து.

**-க.கைலாசபதி.**
***(1981 சமூகத்தொண்டன் இதழிலிருந்து.)***

இன்று பாட்டெழுதும் பலரும் (புதுக் கவிதையாளர் எனப்படுவோர்), யாப்பமைப்பு தமது விடுதலைக்குத் தடையாகிறது எனக் கருதி அதனை நிராகரித்துள்ளனர். எனது அநுபவத்தில், யாப்பின் சாத்தியப்பாடுகள், எதிர்பாராத வகையிலே விரி சிந்தனையையும், சுயாதீனமான உணர்வு மூட்டங்களையும் திறந்து காட்டுகின்றன. எதேச்சையான குறியீடுகளாகிய சொல்லோசையின் தற்செயலான பொருத்தப்பாடுகள், நிர்க்கதியான அலைச்சல்களைக் காட்டிலும் பயனுள்ள மூலவளங்களின் முன்னிலையில் நம்மைக் கொண்டு சென்று நிறுத்தி விடுகின்றன. அதனால், செய்யுளின் எல்லைகளுக்குள்ளே நடமாடியவாறே பாட்டுப் படைப்பது பெரும்பாலான தருணங்களில் மிகவும் இலகுவான காரியமாகி விடுகின்றது. என்னைப் பொறுத்தவரையில், யாப்பினைக் கைவிட்டால், எழுதுவது கடினமான வேலையாவதனையும் நான் அவதானித்துள்ளேன்.

ஆனால், பழமையான செய்யுள் முறையிலிருந்து போதிய நியாயத்துடன் விலகிச்செல்லும் நடைமுறைகளையும் பரிசீலித்துப் பார்த்துள்ளேன். இந்த விலகல்களுக்கான உதாரணங்களை இப்புத்தகத்தில் வரும் பாட்டுக்களிலே தேடிக் கண்டுகொள்ளலாம். இந்த விலகல்களைப் பின்வருமாறு பொழிப்பாக்கிக் கூறலாம்.

1. வாய்ப்பாட்டுத்தனமான சமச்சீர் நிபந்தனைகளைக் கைவிடுதல். உதாரணமாக விருத்தத்தில் நான்கு அடிகள் வரும். மூன்று அடிகளில் அல்லது ஐந்தாறு அடிகளிலும், வழமையான விருத்தப் பாட்டோசைச் சீர் ஒழுங்கினை உடைய செய்யுள்களை ஆக்கலாம். ஒரே பாட்டிலோ, அல்லது பாட்டடிகளின் இடையிலோ ஓசைக் கோலத்தைத் தேவைக்கு ஏற்றவாறு மாற்றலாம். பெரும்பான்மையான தமிழ்ச் செய்யுள்களில் அடிகளின் தொடக்கத்தில் எதுகைத் தொடை அமைதல் மரபு. அவ்வாறன்றி எதுகைகளை இடைநடுவில் அமைக்கலாம்; அல்லது எதுகைகளைக் கைவிடலாம். (மோனையைக் கைவிடுவது மிகவும் சிரமமான காரியம்).

2. பாட்டின் பொருளுருவத்துக்கு ஏற்றவாறு செய்யுளிலும், வசனப் பகுதிகளில் வருவதுபோன்று, பல்வேறு அளவுகளில் அமைந்த பந்திகளை அமைக்கும் முறையினைப் புகுத்தலாம். நெகிழ்ச்சி மிகுந்த இத்தகைய பந்தியமைப்பினால் பாட்டுகளின் இயக்கச் சுதந்திரம் அதிகமாகும்.

3. பாட்டியல் நூல்களிற் காணப்படும் மங்கலச் சொற்போன்ற சோதிடத்தனமான நிபந்தனைகளைப் பொருட்படுத்தாமல் விடலாம்.

4. அகவல்களைக் கட்டளைக் கலித்துறைகள் போன்ற சில செய்யுள்கள் இன்ன எழுத்திலே முடிவடைதல் வேண்டும் என்பதுபோன்ற, அர்த்தமும் பயனுமற்ற நியதிகளை விட்டொழிக்கலாம்.

மேற்சுட்டப்பட்டவாறன விலகல்களை இந்நூலில் இடம்பெறும்பாட்டுகளில் ஆங்காங்கே அவதானித்தல் கூடும். இவ்வாறான விலகல்கள் இருந்தாலும், மரபு வழியான அநுபவ வரலாற்றில் ஈட்டப்பட்ட ஓசைக்கோலக் கூறுகளின் முலவளத்தை அப்படியே முழுமையாகத் தூக்கி வீசிவிடுதல் புத்தியாகாது. பழைய ஓசைக்கோலக் கூறுகளின் புதிய சேர்மானங்களையும் வரிசை மாற்றங்களையும் நாம் ஆக்கிப் பயன்படுத்துதல் நலம்.

***இ.முருகையன்***
***நீர்வேலி தெற்கு,***
***நீர்வேலி, இலங்கை.***
***11.7.88***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அறிவெழுச்சிப் பொங்கல்

மண்டிக் கிடக்கும் மடமை கெடுப்பதுபோல்
எண் திக்கும் பொன்னொளியை ஏற்றி
இருள் துண்டிக்க
வந்து கிழக்கில் மலர்கின்றான் ஞாயிறு, பார்.
புந்தி மகிழ்ந்து புகழ்.

ஆண்டு முழுதும் உழைத்த உழவர்கள்
புண்ட முயல்வின் பொலி பயனாய்
நீண்டிருக்கும்
நெற்கதிரை அன்பால் நெகிழ்ந்து தடவுகிற
பொற்கதிர்க்குப் பொங்கல் புரி.

வேலைக்குத் தக்க விளைவு கிடைக்கும் ஒரு
பூமியைக் காணும் பொருட்டாக
மேல் நடக்கும்
அன்பர்களை வாழ்த்தி அறிவெழுச்சிப் பொங்கலிடு.
துன்பமின்மை நாட்டத் துடி.

விஞ்ஞான நோக்கால் விடிவை விளைத்திடுதல்
எஞ்ஞான்றும் கூடும் எனத் துணிந்து
முன்னேறு.
கண் மறைக்கும் தீய கருமை விரட்டி,
அதோ, விண் எறிக்கும்,
பாராய்-
வெயில்.

-1968

## விழிப்பு வேண்டும்

நாமார்க்கும் குடியல்லோம்
யார்க்கும் அஞ்சோம்
நமக்கெனவே சிந்திக்கும் பழக்கம் உள்ளோம்
ஏமாற்றி எம்மீது சவாரி செய்ய
எவர்களையும் விட மாட்டோம்
இழிந்தோர்க்கெல்லாம்
பூ மாலை புனைந்தேத்தோம்
போற்றிப் பாடோம்
புனைகதையைப் புனைகதையாய்ச் சுவைப்போமன்றி
ஆமாம் என்று அனைத்துக்கும் தலையை ஆட்டோம்
அறிவறிந்தோம்
அறியாமை அறிந்து தேர்ந்தோம்

'முன் நடப்போர் நாம்;
முதலோர்-மேலோர்' என்று
மொழிந்தபடி தம்பட்டம் அடிக்கும் பேர்கள்
தன்னலத்தை மறைப்பதற்குச் சொற்கள் தேடிச்
சலசலப்புக் காட்டுவதைச் சகிக்கமாட்டோம்
என்ன எவர் சொன்னாலும் ஆய்ந்து பார்ப்போம்
எழுத்தறிந்தோம்
எழுச்சி கொண்டோம்
இதயம் வாய்ந்தோம்
கன்னமிட்டுக் களவெடுத்தும் தப்ப எண்ணும்
கருத்துடனே செயற்படுவோர் விழிக்க வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாயடைத்துப் போனோம்

'ஏன் நண்பா மௌனம் எதற்கு?'
என்று கேட்டிருந்தாய்.
வாயடைத்துப் போனோம்.
வாராதாம் ஒரு சொல்லும்.

பொய் வதந்திக் கொள்ளி பொசுக்கென்று போய்ப்பற்ற
ஏற்ற வகையில்
இதமான நச்செண்ணெய்
ஊற்றி
அதில் ஊற வைத்த உள்ளங்கள் இல்லாமல்
இத்தனை தீய எரிவு நடைபெறுமா?
எத்தனை தீய எரிவு - தலையுடைப்பு,
குத்து வெட்டு, பாயும் குருதிக் குளிப்பாட்டு!
சற்று முன்னர் மட்டும் சகஜமாய்ச் சாதுவாய்ப்
பேசி இருந்த பிராணி
சடக்கென்று
வாளை இடுப்பாற் கழற்றி
மனங்கூசாமல்
ஓங்கி விளாச ஒருப்பட்ட சிந்தையதாய்
மாறிவிட்ட விந்தை மருமம் என்ன?
'சுர்ரென்று'
சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?
கொள்ளை, திருட்டு, கொலைகள், கடையுடைப்பு,
பிள்ளை அரிவு, பிடுங்கல், வதை புரிந்து
சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?

ஒன்றும் எமக்குச் சரியாய் விளங்கவில்லை.
'திக்'கென்ற மோதல் - திடுக்கிட்டுப் போனோமே!
வாயடைத்துப் போனோம்.
வாராதாம் ஒரு சொல்லும்.

1978

## கடவுளுக்கு விளையாட்டு...

தொடர்ந்து மூசிச் சுழற்றிய காற்றும்
ஓய்ச்சலே இன்றி ஊற்றிய மழையும்
விளைத்த சேதமோ மிகமிகப் பெரிது.

வெள்ள நிவாரண வேலையின் பொருட்டு
ஜீப்பிலும் லொறியிலும் நடந்தும் அலைந்தவர்,
மாட்டு வண்டி, வள்ளம், சயிக்கிள்,
கிடங்கிலும் சேற்றிலும் விழுந்தெழ உலைந்தவர்-
கடமையின் இறுதியில்,
காரால் இறங்கிய
ஆட்சித் தலைவர் அலுத்துக் கொள்கிறார்-
'கடவுளுக்கு விளையாட்டு
கவண்மென்ற்றுக்கு சீவன் போகுது!'

அரசின் ஓர் அங்கம் என்ற முறையிலே
உரிமையும் உண்டு போலும்!
அந்த அலுவலர் அலுத்துக் கொள்கிறார்.

1984

## சுவைகள்

சின்ன மாமி சிரிக்கிறாள் கொஞ்சம்.
முன் புறம் பார்த்தால்,
படியச் சீவிய கூந்தல்;
இரண்டு குங்குமப் பொட்டு-
பின்புறம் பின்னலோ கொண்டையோ
இல்லை.
குறுக நறுக்கின கூந்தல்தான் உள்ளது.

'அடுத்த தடவை
அமெரிக்காவிலே
வீடியோ றெக்கோடர் ஒன்று வாங்கி
வீட்டுக்குக் கொண்டு வரவேண்டும்.
வேறு
சாமான்கள் கொண்டுவர மாட்டேன்'
என்றாள்.
தன் கூந்தல் தடவி விட்டாள்.
தலையைச் சாய்த்தாள்.

'அது ஒரு பெரிய திரவியமா?'
என
மருமகன் கேட்கிறான், மாமியாரிடம்.
'யாரோ சிலபேர்-
வேலை இல்லாதவர்-
அடிக்கிற கூத்தையும் இடிக்கிற இடியையும்
படிக்கிற பாட்டையும்
மறுபடி
மறுபடி
போட்டுப் பார்த்துக் கேட்பது தானோ
பெரிய காரியம்?'
-மருமகன் கேட்கிறான்.

தாலியும் சேலையும் தாவணி மடிப்பும்
தமிழ்ப்பட விருப்பமும் இன்னமும் பேணும்
அமெரிக்க மாமியோ அதிசயப்படுகிறாள்.

'நெடுமுடிக் குறுந்தாடிக் கொழும்பு மருமகன்
எவ்வித பொருள்களில் இரசனை உள்ளவன்?
எவ்விதச் சுவைகள் இவளிடம் உள்ளன?'
சின்ன மாமி திகைக்கிறாள் - கொஞ்சம்.

1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதொரு பாகன்

இது நடந்து முடிஞ்சு ஒண்டும் கனகாலம் ஆகேல்லை. ஒரு ஒண்டு அல்லது ஒண்டரை வருசந்தானிருக்கும். மாதொருபாகனார் வழக்கம்போல அழைப்பிதழ் இல்லாமல்தான் அந்தக் கூட்டத்திலையும் கலந்துகொண்டார்.

சங்கக்கடை எண்ட அளவுக்குமேல் எந்த விசயத்திலும் எள்ளளவிலும்கூடக் கூட்டுறவை ஏற்றுக்கொள்ளாத வீரத்தமிழர்கள் உலகின் எந்த மூலைக்குச் சென்றாலும் அங்கு ஒரு தமிழ்ச்சங்கம் திறப்பார்கள். அங்கு என்ன வாழ்கின்றதோ வளர்கின்றதோ, வம்பு வளரும். வம்பு வளர்ப்பதையே தொழிலாகக் கொண்டவரின் சிந்தை வளரும். இவ்விதமான வம்புமட விறல்வீரர்கள் இடையிடையே கூடுவர். தத்தம் எண்ணக் கருத்துக்களை மத்தாப்பாய்ச் சிதறவிடுவர். வரிசைக்கிரமமாக எழுந்துநின்றோ அல்லது வட்டவடிவிலே கதிரைகள் போட்டுக் குந்தியிருந்தோ சங்கம்மீது தாம் கொண்டுள்ள பாத்தியதை இன்னதென்று தாவிக்குதிப்பர். சங்கம் வளர்த்த தமிழ்நாட்டின் சட்டமன்றத்தில் வேட்டிகள் பறப்பதுபோன்ற கண்ணுக்கினிய காட்சிகட்குப் பதிலாய் ஆங்கிலேயரைப் பார்த்துப் பொறுக்கிய கழுத்துப் பட்டியை எட்டிப்பிடிக்கும் திருக்கூத்துக்கள் இடம்பெறும். இவ்விதமான அஷ்டமாசித்திகள் வாய்ப்பப்பெற்ற தமிழ்ச்சங்க மண்டபமென்ற திருத்தலத்திலேயே பிரஸ்தாபக் கூட்டமும் நடைபெற்றது.

தலைவர் செருமிக் கனைத்துத் தொடங்கினார். "கடந்த காலத்தில் தமிழ்ச் சனத்தின்ரை விடுதலைக்காகக் கடுமையாப் பாடுபட்ட நாங்களெல்லாரும் திரும்பவும் இஞ்சை கூடியிருக்கிறம். எங்கட தொடர்ந்த Participation இன்னமும் தேவையெண்டதைத்தான் நடக்கிற சம்பவங்கள் தெளிவாக்குது. எங்கடை இவர் இஞ்சையிருந்து போய்ப் பாராளுமன்றத்திலை பதவியேற்றுத் திரும்பியிருக்கிறார். அவரிட்டைப் பிரேமதாசா ஒரு இடைக்காலத் தீர்வொன்றை முன்வைக்கச் சொல்லியிருக்கிறார். நீங்களும் உங்கடை அபிப்பிராயங்களைச் சொன்னால் எல்லா விசயங்களையும் பரிசீலிச்சு ஒரு "Amicable settlement" ஒண்டை நாங்கள் உருவாக்கலாம்.

தலைவர்நீட்டி முழக்கித் தன்னுரை முடித்ததும் நடுத்தர வயதானவர் ஒருவரைப் பேச அழைத்தார். அவர் தேம்ஸ் நதிதீரத் தென்றலால் 'டாய்மொழி' மறந்துபோனார்போலும். அவர் கலந்துகட்டிப் பேசியதை மா.பா. இயன்றளவிற்குச் சுத்தத்தமிழில் மொழிபெயர்க்கின்றார்.

"எங்களுக்கு ராஜீவ்-ஜேஆர் ஒப்பந்தம் மூலம் இந்திய அமைதிப்படையின் கண்காணிப்பின் கீழ் மாகாணசபையென்ற அருமையானதோர் தீர்வு கிடைத்தது. அதனை முதற்படியாகக்கொண்டு ஒற்றுமையாகச் செயற்பட்டிருந்தால் இப்ப தமிழீழமே கிடைச்சிருக்கும். அதற்குப் பதிலாச் சண்டைபோட்டு என்ன கிடைத்தது? குப்பி வைத்திருக்கவேண்டிய கைகளில் AK-47 அல்லது M16". பேசி முடித்ததும் தன்னை ஆசுவாசப்படுத்திக்கொண்டு சபையை நோட்டமிட்டார்.

மூலையில் இருந்த பெடித்தரவளி ஒருவர் தலைவரிடம் அனுமதி பெற்றுப் பேச ஆரம்பித்தார்.

"இராஜீவ் காந்தியும் ஜேஆர் ஜெயவர்த்தனாவும் பேசித் தீர்த்துக்கொண்டது தங்கடை பிரச்சனைகளைத்தான். தமிழர்கள் பாவம், அவையின்ரை பிரச்சனையைத் தீர்த்து வைக்கவேணுமெண்டு அவை ஒரு நாளும் நினைக்கேல்லை. அப்பிடியொரு மெய்யான அக்கறை இருந்ததெண்டால் திலீபன் முன்வைச்ச கோரிக்கைகள் குப்பைக்கூடைக்குப் போயிருக்காது. தமிழ்ச்சனத்தின்ரை ஒரு அரசியல் பிரதிநிதி சாகும்வரை உண்ணாவிரதமிருக்கிறார். அதற்கு ஆதரவா ஊர்வலம்போன அவ்வளவு சனமும் விடுப்பே பார்க்கப் போனது? அந்த நேரத்தில உங்கட தமிழ்மக்களின் காவலர் இராஜீவ் காந்தி மெரினாக் கடற்கரையிலை நிண்டு வெற்றி கொண்டாடினவர். அவரைப் பொறுத்த வரைக்கும் தமிழ்ச் சனத்தின்ரை விடுதலைப் போராட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலைஞ்சு பெடியளின்ரை குருவி சுடுற விளையாட்டு. JR நல்ல விளப்பாமாத்தானே சொன்னவன். இந்தியப் படையள் வந்தபிறகு என்ரை படையளுக்கு ஒரு சேதமுமில்லை. என்ரை நோக்கம் தடைப்படவுமில்லையெண்டு. அந்த நேரத்திலை இரண்டு தலைவர்களும் நினைச்சது, "போறது பெரும்படை, பத்தே நாளிலை எல்லாத்தையும் Clear பண்ணுமெண்டு. ஆனால் கிடைச்ச முடிவென்னவோ 'அமெரிக்காவுக்கு வியட்நாம், இந்தியாவுக்கு இலங்கை'யெண்ட மண்கவ்வுற சமன்பாடுதான்."

"சரி, இலங்கை அரசு எங்கடை பிரச்சனையைத் தீர்க்கப் போகுதெண்டு சொல்லிறியள். அப்பிடியெண்டால் சர்வ வல்லமை படைத்த அதியுத்தம ஜனாதிபதியால ஏன் இவ்வளவு காலமும் ஒரு தீர்வை முன்வைக்க முடியேல்லை? எத்தனை வட்டமேசை மாநாடுகள் கண்டிட்டம். பண்டாரநாயகா மண்டபத்தில மட்டும் நானறியப் பத்துத்தரம் கூடிக் கதைச்சிருப்பினம். என்ன பிரயோசனம்? அதியுத்தமர் அரசியல் தீர்வெண்ட உடனை அனைத்துக் கட்சியின்ர உடன்பாடும் தேவையாம். ஆரைக் கேட்டுச் சண்டை தொடங்கினவர். சண்டை தொடங்கேக்க இலங்கையிலை UNPயெண்ட ஒரேயொரு கட்சிதான் இருந்ததோ? இல்லை முப்படையளும் தங்கடை தலைமைத் தளபதிக்கே தெரியாமல் சண்டையைத் தொடங்கிட்டினமோ? தமிழர் ஒரு இனமெண்டு சொல்லிக்கொண்டு ஒரு தமிழன் உள்ளை போகேலாத பார்லிமெண்ட் முறைக்குக் கீழை எங்கடை பிரச்சினை தீருமெண்டு நான் ஒருபோதும் நம்பமாட்டன். தர்மநியாயம் ஒண்டுமில்லாமல் சண்டை நடக்குது. கோயிலுக்கும் குண்டு, ஆஸ்பத்திரிக்கும் குண்டு, பள்ளிக்கூடத்துக்கும் குண்டுதானெண்டால் குழந்தைப் பிள்ளையள் சூப்பி வைச்சுக்கொண்டு தள்ளுவண்டில் விடமுடியுமே?..."

முதலில் பேசிய நடுத்தர வயதுக்காரர் மீண்டும் பேசவாரம்பித்தார். "தம்பி...You are speaking on behalf of the Tigers" என்னெண்டு சொல்லுறது ஆங்... புலிகளின் குரல். அவை ஒரு குழுவின்ர அதிகாரத்துக்காகப் போராடுகினம். அவையாலை தமிழ்ச்சனம் என்னத்தைக் கண்டிட்டுது. துவக்கு... சயனைட் குப்பி கொலை... இரத்தம்... Totally it's a blood thirsty light post culture."

தலைவர் முகத்திலே ஏமாற்றம் கொலுவிருந்தது. பிள்ளையார் பிடிக்கப் போகக் குரங்காகி விட்டதே என்ற தவிப்பை வெளிக்காட்டாமல் மெல்லிய 'சவாலே சமாளி' புன்னகையோடு பேசத் தொடங்கினார். "வெவ்வேற விதமான Ideas வாறபடியால் நாங்க இன்னொருக்காக் கூடிப் பேசுறதுதான் நல்லது. இஞ்சை வந்திருக்கிற எல்லாரும் உங்கடை Address, Phone number களை எழுதித் தாங்கோ. We will meet again.

இந்தக் கூத்தெல்லாம் நடந்து முடிஞ்சு கன காலமாகேல்ல. இந்த விவாத விண்ணர்கள் மீண்டும் சந்தித்துக் கொண்டார்களோ இல்லையோவென்றுகூட மாதொருபாகனார் அறிந்திலர். அண்மையில் பெற்றோல் ஷெட் ரில்லரில் தாளம் போட்டபடி வீரகேசரி படித்துக்கொண்டிருந்த மா.பா. 'எமர்ஜென்சி பட்டினை'ப் பட்டென அமத்தி விட்டார். காரணம் அதிர்ச்சியானது. ஆனால் அலாதியானது.

அன்றைய கூட்டத்தில் பாராட்டுகள் பெற்று இங்கு "ஐடியா" பெற்று கொழும்புபோய் சமாதானம் பேசலாமென்ற அண்ணன் சில விடயங்களை எடுத்து விட்டிருந்தார். அவர் நோமல் தமிழரை விடவும் 10 வருடம் அட்வான்சாத் 'திங்க்' பண்ணுறாராம்.

அன்னாரின் அற்புதத் திட்டத்தின்படி தமிழரின் தாயகம் தலைவேறு உடல்வேறு என இரண்டு துண்டாகும். வடக்குக்கு ஒரு மாகாணசபை கிழக்கிற்கு ஒரு மாகாணசபை. இப்பிடி இலங்கையின்ரை ஒற்றையாட்சி முறையைக் கூட்டாட்சி ஆக்கப் போறாராம்.

சரி...கூட்டாட்சி எண்டால் என்னண்ணை? ஒண்டுக்கு மேற்பட்ட தேசிய இனங்களை ஒரு மைய அரசுக்குக்கீழ கொண்டுவரவேணுமெண்டால் முதலில அந்தச் சனங்களின்ரை விருப்பத்தை அறியவேணும். மைய அரசின் கீழ் அவர்கள் இன சமத்துவத்துவத்தோடை நடத்தப்படுவினமெண்டதுக்கு உத்தரவாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடுக்கவேணும். அந்தத் தேசிய இனங்கள் எதிர்காலத்தில தாங்கள் மைய அரசினால் ஒடுக்கப்படுகிறோமென உணர்வார்களாயின் மைய அரசிலிருந்து பிரிந்து சென்று தனியரசமைப்பதற்கான உரிமை இருக்கவேணும். இந்த விடயங்களையெல்லாம் கூட்டாட்சிக்கான அரசியல் யாப்பு உறுதி செய்ய வேணும்.

இந்தப் புண்ணியவானின் அட்வான்சான சிந்தனையில்இவற்றுக்கான சுவட்டையே காணோம். தமிழரின்ரை தாயகத்தைத் துண்டுபோடுற அயோக்கியத்தனத்துக்கு நயவஞ்சகர் சூட்டின பெயர் சமஷ்டி. "ஒய்யாரக் கொண்டையாம் தாழம் பூவாம்... உள்ளே இருக்கிறதோ கட்டுவிரியனும் குட்டியும்... முதலாளியின்ரை மிச்ச யோசனைகளும் இப்ப இருக்கிற இலங்கையின்ரை ஒற்றையாட்சி முறைக்குக் காவடி தூக்கின மாதிரி....

அப்ப சுப்பர் மார்க்கட் முதலாளியின்ர நோக்கம் என்னெண்டு யோசிப்பியள்.. சிங்களக் கட்சியள் எல்லாத்துக்குமே தமிழற்றை அரசியல் கோரிக்கைகளைஅட்ரஸ் இல்லாமல்ப் பண்ணவேணுமெண்டொரு ஆவிலாதி கனகாலமா இருந்துவருகுது. "இனமெண்டா சொல்லிறியள்... காலங்காலமான பாரம்பரியப் பிரதேசம் இருக்கிறதாலைதாலதானே துள்ளிறியள்... துலைக்கிறன் பார் அதையுமெண்டு வெளிக்கிட்டிருக்கினம்.

அரசாங்கத்தின்ர கனவு அதோட நிக்கேல்லை. இது முதல்ச்சாமக் கனவு. இரண்டாம் சாமக் கனவின்படி தென் தமிழீழத்திலை மிச்சத்தையும் கொழுத்தி விடுதலைப் புலிகளை ஓரம் கட்டோணும். மூன்றாம் சாமக் கனவுதான் திறமானது. தென் தமிழீழத்தைத் தன்னுடைய அரசியல் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள்ளை கொண்ணந்திட்டாப் பிறகென்ன... தமிழீழ விடுதலைப் போராட்டம் = வடக்குப் பயங்கரவாதிகளின் வன்செயலெண்டு ஊரைக் கூட்டித் தம்பட்டமடிக்கலாம்.

SPS

SRI PRAGAS STORES

SRI PRAGAS STORES

எங்களிடம் இலங்கை, இந்தியா சிங்கப்பூரிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
பனாறிஸ் பட்டுச்சேலை, காஞ்சிபுரம் சேலை மைசூர் சில்க் சேலை, பட்டுவேட்டி சால்வை
மற்றும்
சிறுவர் சிறுமியாின் சிங்கப்பூர் உடுப்புகள்எவர் சில்வர் பாத்திரங்கள், மரக்கறிவகைகள்,
மீன் வகைகள், அரிசி, அரிசிமா, மிளகாய்த்தூள், இடியப்பம்
மற்றும் சகலவிதமான உணவுப்பொருட்களும், பெற்றுக்கொள்ளலாம்.

தமிழ், இந்தி, மலையாளப் படங்கள்
C.D & ஓடியோ, வீடியோ கசட்டுகள்
யாவற்றையும் ஒரே இடத்தில் குறைந்த விலையில் பெறறக் கொள்ள
நாட வேண்டிய ஒரே ஒரு புதிய ஸ்தாபனம்

SRI PRAGAS STORES


54 LADYWELL ROAD LONDON SE13 7UZ

TEL : 081- 314 5542



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# T.P. மாஸ்ரரை நினைவில் நிறுத்துவோம்



தோற்றம் 10.02.1934
மறைவு 6.11.1992

உதைபந்தாட்டத்தின் மூலம்
தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புகழை
அகில இலங்கையிலும் பரவச்செய்த
உதைபந்தாட்டப் பயிற்சியாளர்
**திரு.T.P.பத்மநாதன்**
அவர்களுக்கு

## எமது அஞ்சலி

பழைய மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org